விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1848)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 25 புதன்கிழமை (07.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 109

## ஒன்லைன் கேம் விளையாட கைபேசி கொடுக்காததால்

### விபரீத முடிவெடுத்த யாழ்.மாணவன் மரணம்



(யாழ்ப்பாணம்)

கைத்தொலைபேசியில் தொடர்ச்சியாக ஒன்லைன் கேம்விளையாடிய பாடசாலை மாணவன் ஒருவன் தாயார் கைத் 19

## மலசலகூடத்துக்குள் விழுந்த கர்ப்பிணி மரணம்

(யாழ்ப்பாணம்)

மலசலகூடத்திற்குள் சறுக்கி விழுந்த கர்ப்பிணிப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் மானிப்பாய் 19

## பெட்டி விழுந்ததில் குடும்பப் பெண் பலி

### கொக்குவில் கிழக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டின் அறையில் உயரத்தில் இருந்த பெட்டி ஒன்றினைத் தூக்கும்போது அது இடுப்பு பகுதியில் விழுந்ததில் காயமடைந்து சிகிச்சை 19

## ஜெனிவா விவகாரம், அரசியல் தீர்வு தொடர்பில்

# பிரித்தானிய தூதுவர் சாரா கூட்டமைப்புடன் பேச்சு



(கொழும்பு)

ஜெனிவா விவகாரம், அரசியல் தீர்வு தொடர்பில் பிரித்தானிய தூதுவர் சாரா ஹமில்டன் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், பிரித்தானியாவின் இலங்கைக்கான 19

## துணிவிருந்தால் சர்வதேச நீதிமன்றில் சந்திக்கலாம்

### கஜேந்திரன் எம்.பி

(கொழும்பு)

ஜனாதிபதி என்பதற்காக படுகொலைகளைச் செய்ய முடியாது. 19

## காதலனின் உயிரிழப்பை தாங்க முடியாத காதலி

### சோகத்தில் தானும் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

காதலன் உயிரிழந்த சோகத்தில் அதனை தாங்க முடியாத காதலியும் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

இதில் இருபாலை மடத்தடியை சேர்ந்த 21 வயதுடைய இராசேந்திரம் இனிஷா என்ற 19

## தூக்கத்துக்கு சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(அராலி)

இரவு தூக்கத்திற்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் 19

## கொரோனா மேலும் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி மேலும் 2 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்நேற்று உறுதிப்படுத்தினார். 19

## போரில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது

# கொழும்பு பேராயர் கர்தினால் ஏன் மௌனமாக இருந்தார்?



### பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி கேள்வி

*(யாழ்ப்பாணம்)*

இறுதிப் போரின்போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டபோது கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஏன் மௌனமாக இருந்தார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பாராளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார். *(19ஆம் பக்கம் பார்க்க)*

## மயிர்கொட்டி இருப்பதாக வேலியை எரித்த கும்பல்

### அணைக்கச் சென்ற காணி உரிமையாளர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் - நீமசிட்டி பகுதியில் மயிர்கொட்டிகள் (முசுக்குட்டி) இருப்பதாக கூறி வேலியை கொளுத்திய கும்பல், தீயை அணைக்க முயற்சித்த காணி உரிமையாளர் மீது மூர்க்கத்தனமான 19

## புதுக்குடியிருப்பில் துப்பாக்கியும் ரவைகளும் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து, துப்பாக்கியும் ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன. 19

## யாழில் 21 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆய்வுகூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் யாழ்.குடாநாட்டில் 21பேர் உள்ளிட்ட 22 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 409 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவ்வாறு 22 பேருக்கு 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா வைரஸை மக்கள் குறைத்து மதிப்பீடு செய்கிறார்கள்

## தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை மருத்துவர் ஹசித் அத்தநாயக்க எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை குறைவடைவதால் அபாயம் இல்லை என மக்கள் கருதக் கூடாதென தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை மருத்துவர் ஹசித் அத்தநாயக்க எச்சரித்துள்ளார்.

மக்கள் கொரோனா வைரஸ் தொடர்பாக குறைத்து மதிப்பீடு செய்கிறார்கள். ஆனால் அது மிக தவறான நடவடிக்கையா கும். நோய் பற்றிய சில விடய ங்கள் இன்னமும் பரிசோதனை நிலையிலேயே உள்ளன.

அதனால் ஏற்படப்போகும் பாதிப்பு குறித்து எங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்ட அறிவே உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரசின் பாதிப்பிலிருந்து மீண்டவர்கள் எதிர்கொள்ளக்கூடிய நுரையீரல் மற்றும் உடலின் ஏனைய உறுப் புகள் தொடர்பான பாதிப்புகள் குறித்து ஆராய்ச்சிகள் இடம் பெறுவதாக அவர் தெரிவித்துள் ளார்.

பொதுமக்கள் நோய்ப் பரவல் தொற்று குறித்து எச்சரிக்கை யுடன் இருக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

புதுவருட பொருட்கள் கொள் வனவில் ஈடுபடும்போது பொது மக்கள் எச்சரிக்கை யுடன் இருக் கவேண்டும் என அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார். (ம-03)

# நயினாதீவுக்கான உள்ளக பேருந்து சேவை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தடைப்பட்டிருந்த நயினா தீவுக்கான இலங்கை போக்கு வரத்துச் சபையின் உள்ளக பேருந்து சேவை சீர்செய்யப் பட்டு மீண்டும் தனது சேவை களை நேற்றுச் செவ்வாய்க் கிழமை ஆரம்பித்துள்ளது.

பேருந்தில் ஏற்பட்ட சில திருத்த வேலைகள் காரண மாக இலங்கை போக்குவரத்துச் சபை கடந்த சில தினங்களாக குறித்த பேருந்து சேவையை நிறுத்தியிருந்தது குறிப்பிடத் தக்கது. (ம-03)

# ரஞ்சன் ராமநாயக்க சிறை செல்ல சஜித்தும் சம்பந்தனுமே காரணம்

## சபையில் அமைச்சர் மஹிந்தானந்த

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ் சன் ராமநாயக்க சிறை செல்வ தற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் சம்பந்தனுமே காரணம் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றம் சுமத்தியு ள்ளார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் அவர் இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ரஞ்சனுக்கு மனு தள்ளுபடி செய்யப்பட்ட விவகாரம் குறித்து நேற்றைய தினம் பாராளுமன்றில் பேசிய போது அதனை குறுக்கீடு செய்து பேசிய மஹிந்தானந்த அளுத் கமகே இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தம்மை அனைத்து தரப் பினரும் கைவிட்டு விட்டதாக ரஞ்சன் ராமநாயக்க தம்மிடம் கூறியதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

103 பேர் சாட்சியமளிக்க இருந்த போதிலும் 3 பேரின் சாட்சியங்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு விசா ரணை முடிவுறுத்தப்பட்டதாக வும் தனது தேவைக்காக ரஞ் சனை சஜித் பலிக்கடாவாக் கியுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சஜித் பிரேமதாசவே ரஞ்சன் ராமநாயக்கவிற்கு சட்டத்தர ணியை ஒழுங்கு செய்து கொடு த்ததாகவும் பாராளுமன்ற உறு ப்பினர் சுமந்திரன் ரஞ்சனின் சார்பில் வாதாடியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. சிவானந்தம் ஏகாம்பரம்

(இலங்கை அதிபர் சேவை தரம் - I)




புதுக்குடியிருப்பு மண்ணின் மைந்தனும் தற்போதைய மு / அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலய அதிபருமான திரு. சி. ஏகாம்பரம் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். எனவே அவர் மேலும் பல உயர்வுகள் பெற்று சிறப்புடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

(C-1899)

வாழ்த்துவோர் : புதுக்குடியிருப்பு நண்பர்கள்


# மேல் மாகாணத்தில் தனியார் வகுப்புக்களை நடத்துவதற்கு அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் 12ஆம் திகதி முதல் தனி யார் வகுப்புக்களை நடத்துவதற்கு அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் கொரோனாத் தொற்று குறைவடைந்ததன் காரணமாக தனியார் வகுப்புக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கோவிட் நோய்த் தொற்று காரணமாக மேல் மாகாணத்தில் தனியார் வகுப் புக்கள் நடத்துவதற்கு இதுவரையில் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மரிய சேவியர் அடிகளாரின் உடல் கல்லறையில் வைப்பு






JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT

OFFERS

Register Now

Diploma Certificate

For Electronics Servicing Technician Course

In Repairing Laptops, TV, Radio, Cell Phones, Av Amplifiers and other electronic related Items.

Syllabus Based on NVQ

இது ஒரு செயல்முறை பயிற்சி - Full Practical Oriented Mode

தமிழ் மொழி மூல விளக்கங்கள்

Working people and G.C.E O/L Students are eligible to apply

Duration : 300 Hrs. weekend / weekdays

Starts on 10th April 2021, 10.30 a.m

Contact : 021 222 3382 / 077 844 5417

Next To Commercial Bank

No. 464, Hospital Road, Jaffna.

(6441)



கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் [வ-து]

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

பதவி வெற்றிடம்

| | | |
|---|---|---|
| பதவி | : | களஞ்சிய முகாமையாளர் 208/16 |
| சம்பள அளவுத்திட்டம் | : | 15135-120×10-135×10-17685 |
| தகைமைகள் | : | 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 35 வயதுக்குட்பட்ட வராகவும் இருக்க வேண்டும். க.பொ.த (சா/த) கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். ஆகக் குறைந்தது ஒரு வருட முன் அனுபவம் விரும்பத்தக்கது. |

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் பெற்று 17.04.2021 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் " தலைவர் ", கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(C-1898)

தலைவர்

கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 4000 மருத்துவர் வெற்றிடங்கள் சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள அரச வைத்தியசாலைகளில் மருத்துவர்களு க்கான பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மருத்துவர்களுக்கான சுமார் 4 ஆயிரம் வெற்றிடங்கள் நிலவுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



ஒவ்வொரு வருடமும் சுமார் ஆயிரம் வைத்தியர்கள் பல் கலைக்கழகங்களிலிருந்து வெளியேறுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம், மருத்துவர் அசேல குண வர்தன தெரிவித்தார்.

அவர்களில் ஒரு பிரிவினர், தனியார் துறையில் பணியை தொடர்வதாகவும் மற்றுமொரு பிரிவினர் உயர்கல்வி நடவடி க்கைகளுக்காக வெளிநாடுகள் நோக்கி செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு வெளிநாடுகளு க்குச் செல்லும் மருத்துவர்கள் மீண்டும் நாட்டிற்கு வருகை தருவதில்லை எனவும் சுகா தார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்தன இதன்போது சுட் டிக் காட்டினார். (நி-4)

# ஐ.நா.தீர்மானத்திற்கு எதிராக அஸ்கிரிய பீடம் போர்க்கொடி



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் சபையில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மா னத்தை அஸ்கிரிய பீடம் அடி யோடு நிராகரித்துள்ளது.

ஐ.நா. தீர்மானத்துக்கு எதிராக கட்சி பேதங்களை மறந்து அனைவரும் அணி திரள வேண்டும் என்றும் அஸ் கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீஞான ரதன தேரர் கோரிக்கை விடுத்து ள்ளார்.

கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், அஸ்கிரிய பீடத்துக்கு நேற்று முன்தினம் சென்ற போதே, வரகாகொட ஸ்ரீஞான ரதன தேரர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது,

"இந்த முக்கியமான கட்ட த்தில் இலங்கையர்கள் அனை வரும் ஒரு நாடாக ஐக்கியப் படாவிட்டால், எதிர்ச் சக்திகள் நன்மையடைந்துவிடும்.

இலங்கை இராணுவத்தினர் பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் அப்பாவி தமிழ் மக்களின் உயிர்களைக் காப் பாற்ற எவ்வாறான நடவடிக் கைகளை முன்னெடுத்தனர் என்பதைமுழுஉலகமும்கண்டது.

தமிழீழ விடுதலைப் புலி களுக்குச் சார்பான தரப்பினர் முன்வைக்கும் அழுத் தங்களைப் பொருட்படுத்தாமல் இன, மத, கட்சி பேதம் கடந்து இலங்கையர்கள் ஒன்றுபட வேண்டும்" என தேரர் தெரி வித்தார். (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியாக நஃபர் மௌலவி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குத லின் சூத்திரதாரிஎன தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள நஃ பர் மௌலவி அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சஹ்ரானையும் அவரது ஆதரவாளர்களையும் மூளைச் சலவை செய்வதன் மூலம் தாக்குதலை நடத்த தூண்டி விட்டார் என்பது தெரிய வந்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (நி-4)

# மேலும் 6 மில்லியன் 'ஸ்புட்னிக் வி' அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

மேலும் 6 மில்லியன் 'ஸ்புட்னிக் V' ('Sputnik V') தடுப்பூசிகளை கொள் வனவு செய்வதற்கு அமை ச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது.

சுகாதார அமைச்சரினால் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, ஏற்க னவே முற்பதிவு செய்யப்பட் டுள்ள 7 இலட்சம் தடுப்பூசி களுக்கு மேல திகமாக 6 இலட்சம் தடுப்பூசிகள் கொள் வனவு செய்யப்படவுள்ளன.

ஒரு தடுப்பூசி 9.95 அமெ ரிக்க டொலருக்கு கொள் வனவு செய்யப்படவுள் ளது. (நி-4)

# புதுவருடத்தை முன்னிட்டு விசேட பேருந்து சேவை

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புதுவருட த்தை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்கு செல்லும் மக்க ளுக்காக 3500 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்த தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டு அபிவிருத்தி வலயங்கள் மற்றும் ஆடைத் தொழிற்சாலைகளில் பணி புரியும் ஊழியர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்காக விசேட பேருந்து சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-4)

# மாகாணசபைத் தேர்தலுக்கான சிக்கலை தீர்க்க 6 மாதம் தேவை

(கொழும்பு)

மாகாணசபை தேர்தலை நடத்துவதில் உள்ள சிக்கல் நிலைக்கு தீர்வு காண குறைந்த பட்சம் 6 மாத காலம் தேவை ப்படும்.

அத்துடன் நடைமுறையில் உள்ள தேர்தல் முறையில் காணப்படும் சிக்கல் நிலைமை குறித்து ஆராய 15 பேர் கொண்ட குழு நியமிக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசி ரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்து கொண்டு கருத்து ரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதில் உள்ள சிக்கல் நிலைக்கு தீர்வுகாண குறைந்தது 6 மாத காலம் தேவை என எதிர்பார்க்கப்படு கிறது. குழப்பகரமான சூழ் நிலையில் தேர்தலை நடத்த முடியாது. சிறந்த தீர்வு கண்ட பின்னர் மாகாண சபை தேர் தல் நடத்தப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# தாய்-சேய் சுகாதார சேவை; இலங்கைக்கு சர்வதேசம் பாராட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவ லுக்கு மத்தியிலும் சுகாதார சேவையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது குறித்து இலங்கைக்கு சர்வ தேச சமூகம் பாராட்டுத் தெரி வித்துள்ளது.

கொவிட் வைரஸ் பரவலி னால் நாட்டில் தாய் மரண ங்கள் அதிகரித்திருப்பதாக வெளியாகியுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பான தாகும் என்று ஐக்கிய நாடு கள் சபையின் சிறுவர் நிதி யம் வலியுறுத்தியுள் ளது.

சுகாதார அமைச்சுடன் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விட யம் தொடர்பாக குறிப்பிடப் பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தி யிலும் சவாலான காலப் பகுதியில் தாய்-சேர் சுகா தார சேவைகளை தொடர்ச்சி யாக வழங்கும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் இடம்பெற்ற காலப் பகுதியிலும் தாய்-சேர் சுகா தார சேவையில் இடம் பெறும் பாதகமான விளை வுகளை தடுக்க இலங்கை மேற்கொள்ளும் கூட்டு முய ற்சிகள் பாராட்டத் தக்கவை யாகும் என்று ஐக்கிய நாடு களின் சிறுவர் நிதியம் சுட்டி க்காட்டியுள்ளமை குறிப்பி டத்தக்கது. (நி-4)

# மியன்மாரில் சிக்கியுள்ள மீனவர்கள் விரைவில் மீட்கப்படுவார்கள்- டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

மியன்மாரில் சிக்கியுள்ள இலங்கை மீனவர்கள் விரை வில் மீட்கப்படுவார்கள் என கடற்றொழில் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா உறுதியளி த்துள்ளார்.

இலங்கை கடற்றொழிலாள ர்கள் தவிர்க்க முடியாத கார ணங்களினால் வெளிநாடு களின் எல்லைப் பாதுகாப்பு தரப்பினரிடம் சிக்கிக் கொள் வார்களாயின் அவர்களை மீட் பதற்கு தேவையான அனை த்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்துள்ளார்.



மியன்மாரில் கைது செய்ய ப்பட்டு தடுத்து வைக்கப்பட் டுள்ள கடற்றொழிலாளர்களின் உறவினர்களால் அமைச்ச ரிடம் கோரிக்கை முன்வை க்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மியன்மார் தூதரக அதிகாரிகளுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைது செய்ய ப்பட்டு நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை கடற்றொழிலாளர்களை விடு தலை செய்வதற்கான நடவடி க்கைகளை மேற்கொண்டதாக கடற்றொழில் அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும், மியன்மாரில் காணப்படுகின்ற தற்போதைய அரசியல் சூழல் காரணமாக கைது செய்யப்பட்டிருப்பவர் களை விடுதலை செய்வதில் சில நடைமுறை காலதாமத ங்கள் காணப்படுவதாக அமை ச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மியன்மார் கடற்பரப்பில் நுழைந்த குற்றச்சாட்டில் இல ங்கையைச் சேர்ந்த 12 மீன வர்கள் கைது செய்யப்பட்டு கடந்த 3 வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிட த்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடுகளுடன் ஐ.பி.எல்.போட்டிகளை மும்பையில் நடத்த அனுமதி

ஐ.பி.எல். 20 ஓவர் போட்டி நடைபெறும் இடங்களில் ஒன்று மும்பை. அங்குள்ள வான்கடே மைதானத்தில் வருகிற 10 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை 10 ஆட்டங்கள் நடைபெறுகின்றன. 10 ஆம் திகதி நடைபெறும் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ்- டெல்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதுகின்றன.

மராட்டிய மாநிலத்தில் தற்போது கொரோனாவின் 2ஆவது அலை மிக வேகமாக பரவி வருகிறது. மும்பையில் பாதிப்பு அதிகரித்து வருகிறது. மும்பை மைதான ஊழியர்கள் 10 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மும்பையில் ஐ.பி.எல். போட்டி நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. அங்கு நடைபெற உள்ள போட்டியை ஐதராபாத் அல்லது இந்தூரில் நடத்தலாமா? என்று கிரிக்கெட் வாரியம் ஆலோசனை நடத்தியது.

இதற்கிடையே கொரோனாப் பரவல் அதிகரிப்பால் மராட்டிய மாநிலத்தில் இரவு 8 மணி முதல் காலை 7 மணிவரை ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 30 ஆம் திகதி வரை இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அங்கு ஐ.பி.எல். போட்டி நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று கருதப்பட்டது.

இந்தநிலையில் கட்டுப்பாடுகளுடன் மும்பையில் ஐ.பி.எல். போட்டியை நடத்த மராட்டிய மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பாக மராட்டிய அமைச்சர் நவாப் மாலிக் கூறியதாவது,

மராட்டியத்தில் ஐ.பி.எல். போட்டி நடத்த மாநில அரசு அனுமதி அளித்துள்ளது. கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் கட்டுப்பாடுகளுடன் போட்டி நடத்தப்படும். கொரோனா பாதுகாப்பு வளையத்தை வீரர்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஐ.பி.எல். போட்டிக்காக 4 அணி வீரர்கள் மும்பையில் உள்ள மைதானங்களில் பயிற்சி பெறுகிறார்கள். கட்டுப்பாடுகளுடன் பயிற்சி அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (4)

# ஐ.பி.எல்.வீரர்களுக்கு தடுப்பூசிதான் ஒரேவழி

14ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் மே 30 ஆம் திகதி வரை சென்னை, மும்பை, டெல்லி, கொல்கத்தா, ஆமதாபாத், பெங்களூர் ஆகிய நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.


மும்பை வான்கடே மைதானத்தில் பணிபுரியும் ஊழியர்கள் 10 பேருக்கு கொரோனாப் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மும்பையில் ஐ.பி.எல். போட்டி நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

கொரோனாவால் இது வரை 3 வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு வளையத்துக்குள் வீரர்கள் இருந்தாலும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கொரோனா வைரஸால் பாதிக்கப்படும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் வீரர்கள் யாருக்கும் தடுப்பூசி செலுத்தப்படமாட்டாது என்று கிரிக்கெட் வாரியம் ஏற்கனவே தெரிவித்துவிட்டது. இதனால் வீரர்கள் தொற்றில் இருந்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

இந்த நிலையில் கொரோனாவில் இருந்து தப்பிக்க ஐ.பி.எல். வீரர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதுதான் ஒரே வழி என்று கிரிக்கெட் வாரியத் துணைத்தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.(4)

# ரஷ்ய ஓபன் சர்வதேச பட்மிண்டன் போட்டிகள் ரத்து



ரஷ்ய ஓபன் சர்வதேச பட்மிண்டன் போட்டி ஜுலை 20 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையும் இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் சர்வதேச பட்மிண்டன் போட்டி ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையும் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

கொரோனா அதிகரிப்பு மற்றும் அச்சுறுத்தல் காரணமாக இந்தப் போட்டியை நடத்துவது சாத்தியமில்லை என்பதால் அந்நாட்டு பட்மிண்டன் சங்கங்களுடன் கலந்தாலோசித்து இந்த இரண்டு போட்டிகளும் இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன என்று உலக பட்மிண்டன் சம்மேளனம் நேற்று முன்தினம் அறிவித்தது. (4)

# லா லிகா கால்பந்து போட்டி; பார்சிலோனா அணி வெற்றி



லா லிகா கால்பந்து தொடரின் 29 ஆவது ஆட்ட லீக் போட்டியில் பார்சிலோனா அணி சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

நேற்று நடைபெற்ற போட்டியில் பார்சிலோனா அணியும் வல்லாடோலிட் அணியும் பலப்பரீட்சை நடத்தின.


ரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப்போட்டியில் பார்சிலோனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் பார்சிலோனா அணி சார்பில் ஒசுமானே டேம்பளே போட்டியின் 90 ஆவது நிமிடத்தில் அணிக்கான வெற்றிக் கோலை புகுத்தினார்.

இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா அணி 65 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியது.

இதேவேளை தோல்வியைத் தழுவிய வல்லாடோலிட் அணி 27 புள்ளிகளுடன் 16 ஆவது இடத்தில் உள்ளது. (4)

# தென்னாபிரிக்க தொடர்; பாகிஸ்தான் வீரர் விலகல்




பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இடதுக்கை சுழற்பந்து வீச்சாளரான சதாப் கான், உபாதை காரணமாக நடப்பு தென்னாபிரிக்க தொடர் மற்றும் எதிர்வரும் சிம்பாவே அணிக்கெதிரான சுற்றுப் பயணத்தை தவறவிடுவார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.


கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியின் போது துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சதாப் கானுக்கு இடது கால் விரலில் காயம் ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட எக்ஸ்ரே சோதனையின் போது அவருக்கு முறிவு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்தது.

இதனால் அவரை எதிர்வரும் நான்கு வாரங்களுக்கு ஓய்வில் இருக்கும்படி, மருத்துவக் குழு அறிவுறுத்தியுள்ளது. ஆகையால் அவர் எதிர்வரும் போட்டிகளை தவறவிட நேரிட்டுள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், தொடையில் காயம் ஏற்பட்டதன் காரணமாக சதாப் கான், நியூசிலாந்து டெஸ்ட் மற்றும் சொந்த மண்ணில் நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கெதிரான தொடரில் இருந்து விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# டோக்கியோ ஒலிம்பிக்கிலிருந்து விலகியது வடகொரியா



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல்கள் காரணமாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று வடகொரியா அறிவித்துள்ளது.

கொவிட் -19 காரணமாக ஏற்பட்ட உலக பொதுச் சுகாதார நெருக்கடியிலிருந்து வீரர்களை பாதுகாக்கும் பொருட்டு நாட்டின் ஒலிம்பிக் கமிட்டி இந்த முடிவினை எடுத்துள்ளதாக வடகொரியாவின் விளையாட்டு அமைச்சகம் நடத்தும் ஒரு வலைத்தளம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

பனிப்போருக்கு மத்தியில் 1988 ஆம் ஆண்டு சியோலில் (தென்கொரியா) ஒலிம்பிக்கை புறக்கணித்ததன் பின்னர், கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை வடகொரியா தவறவிட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

2020 டோக்கியோ ஒலிம்பிக்கை கடந்த கோடையில் ஜப்பான் நடத்தவிருந்தது.

ஆனால் கொரோனாத் தொற்று நோய் காரணமாக அது இந்த ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அதன்படி எதிர்வரும் ஜுலை 23 முதல் ஒகஸ்ட் 8 வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு சுபநேர பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

சிங்கள, தமிழ் புத்தாண்டு சுபநேர பத்திரம் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

பாரம்பரியங்களுக்கேற்ப சுபநேரங்களை அடையாளப்படுத்திய பத்திரம் தேசிய மரபுரிமைகள், அரங்கு கலை மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. (நி-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1934.09.03

இறப்பு
2020.03.19

கடந்த வருடம் 19.03.2020 வியாழக்கிழமை அன்று சிவபதமெய்திய எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர். மூத்தர் பொன்னுத்துரை

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி கிரியைகள் எதிர்வரும் 07.04.2021 புதன்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

(5444)

காளிகோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்: பொ.பாஸ்கரன்
மற்றும் குடும்பத்தினர்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏப்ரல் முதல் ஆயிரம் ரூபாய் சம்பளம்

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் முதல் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,000 ரூபாய் பெற்றுக்கொடுக்கப்படும் என அமைச்சர் ரமேஸ் பத்திரண பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிமன்றம் நியாயமான முறையில் ஆராய்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நீதிமன்ற அனுமதிக்கு அமைய, ஏப்ரல் மாதம் முதல் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 1,000 ரூபாய் சம்பளத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ரமேஸ் பத்திரண குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## வடக்கு-கிழக்கில் பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்படும்

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் விசேட பொருளாதார மத்திய நிலையங்களை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் விசேட பொருளாதார மத்திய நிலையங்களை திறப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் தொழில்நுட்பத்தின் ஊடாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இதன்போதே அமைச்சரவை பேச்சாளர் இந்த விடயம் குறித்து தெரிவித்தார். நாட்டு மக்களுக்கு நியாயமான விலையில் பொருட்களை வழங்கும் வேலைத் திட்டத்தை வடக்கு,கிழக்கில் விரிவுபடுத்தும் நோக்கில் பொருளாதார மத்திய நிலையங்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

சதொச கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசிய பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்கு தற்பொழுது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனால் நாடு தழுவிய ரீதியில் இந்த வலைப்பின்னலை விரிவுபடுத்துவதற்காக தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-4)



## மரண அறிவித்தல்

### திரு.வேலாயுதன் சிவஞானசோதி

**B.A(Econ) Hons, MSc(Bradford), U.K**
**FCMA (London), FCA (Sri Lanka), Chartered Accountant**

(முன்னாள் செயலாளர் தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் தற்போதைய செயலாளர், மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பொதுசேவை ஆணைக்குழு அங்கத்தவர்)

*திரு.வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் 05.04.2021 அன்று மாலை சிவபதம் எய்தினார். இவர் காலம் சென்ற பிரபல சட்டத்தரணி திரு.வேலாயுதன் மற்றும் திருமதி.பொன்னம்மா அவர்களின் கனிஷ்ட புத்திரனும், காலம் சென்ற திரு.சிவசுப்பிரமணியம் மற்றும் திருமதி.குமுதினி அவர்களின் அன்பு மருமகனும், குறமகளின் அன்புக் கணவரும்,*

*பிரபல சட்டத்தரணி திரு.தேவசேனாதிபதி மற்றும் தேசிய லொத் தர் சபையின் ஓய்வுபெற்ற பிரதி பொது முகாமையாளர் திரு.சுந்தரேஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரனும், கௌரி, சுமதி அவர்களின் மைத்துனரும், மயூரதன்-சிங்கப்பூர், சிவசங்கரன் -கனடா, சிவகாந்தன், வேல்விழி-கனடா அவர்களின் மைத்துனரும் பிரதாப், துஷ்யந்தன் அவர்களின் சித்தப்பாவும் கோகுல், சுபஹரி, சிவராம், அருண்சிவா அவர்களின் மாமாவும் பிரணவன், பைரவி அவர்களின் பெரியப்பாவும் ஆவார்.*

*அன்னாரது பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் இன்று புதன் கிழமை 9.00-6.00 மணிவரையும் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை வியாழக் கிழமை (Jayaratna VIP Palour வைக்கப்பட்டு) பிற்பகல் 1.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி 4.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.*

திரு.வேலாயுதன் சிவஞானசோதி அவர்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பல்வேறுபட்ட அமைச்சுக்களில் - தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு மற்றும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றில் செயலாளராகவும் வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் செயலாளராகவும்' கடமையாற்றியுள்ளார்.தற்போது மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயலாளராகவும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றினார்.

(C-1310)

**தகவல் : குறமகள் (மனைவி) 077 9007623**

**தேவசேனாதிபதி (சகோதரன்) 077 113 3400 சுந்தரேஸ்வரன் (சகோதரன்) 077 385 0841**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மயானக் காணியையும் கையகப்படுத்திய இராணுவம்

(சாவகச்சேரி)

**தென்மராட்சி-எழுதுமட்டு வாழ் வடக்கு பகுதியில் மயானத்திற்கென தனியார் ஒருவரால் சாவகச்சேரி பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியும் தற்போது இராணுவத்தின் வசம் காணப்படுவதாக மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

நேற்று முன்தினம் திங்கட்கிழமை எழுதுமட்டுவாழ் பகுதியில் தனியாருக்கு சொந்தமான 50 ஏக்கர் காணியை சுவீகரிக்கும் முனைப்பில் நில அளவைத் திணைக்களத்தினர் அளக்க வந்த போது அதனை எதிர்த்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகளே இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

எழுதுமட்டுவாழ் 52வது படைத்தலைமையகம் அமைந்துள்ள 50 ஏக்கர் காணியின் உரிமையாளரான தனியார் ஒருவர் கடந்த காலத்தில் உரிய முறைப்படி தனது காணியில் 2 ஏக்கர் நிலப்பரப்பை மயானப் பயன்பாட்டிற்கென சாவகச்சேரி பிரதேசசபைக்கு வழங்கியிருந்தார்.

இருப்பினும் யுத்த காலத்தின் பின்னர் காணியை அன்பளிப்பாக வழங்கியவரின் 50 ஏக்கர் காணியுடன் மயானத்திற்கு வழங்கப்பட்ட 2 ஏக்கர் காணியும் இராணுவத்தினரால் (52 ஆவது படைப் பிரிவால்) கையகப்படுத்தப்பட்டு விட்டது.

கிராமத்தில் தற்போது மயானம் இல்லாமையால் தனியார் காணி ஒன்றில் உடல்களை தகனம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக மேலும் அவர்கள் தெரிவித்தனர். (5-4-30)

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ். மாவட்டத்தில் பகுதிநேர கற்கை நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது. இதில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர், கணனி படவடிவமைப்பாளர், கணனி வன்பொருள் திருத்துனர், மின்னிணைப்பாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), மோட்டார் வாகன திருத்துனர், இரு சக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துனர், அலுமினியம் பொருத்துனர், கட்டட நிர்மான உதவியாளர், வளிசீராக்கி மற்றும் குளிரூட்டி திருத்துனர், மர வேலை தொழினுட்பவியலாளர், நீர்க்குழாய் பொருத்துனர் ஹோட்டல் முகாமைத்துவம், ஆங்கில மொழி ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இக்கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 16.04.2021 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அல்லது தொழிற்பயிற்சி நிலையங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மேலதிக தகவல்களுக்கு 021 222 7949 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (5-4)

## அங்குரார்ப்பணமும் நடனவகுப்பும்

(பொற்பதி)

வெற்றிலைக்கேணி கரிகாலன் கலாமன்றத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் நடன வகுப்பும் கடந்த வெள்ளிக்கிழமை தலைவர் மூ.சபாரத்தினம் தலைமையில் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வசுகுனா, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் த.செல்வகுமார் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (5-4-64)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவை கலட்டி பிராங்கிளி அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற் சவமும் இடம்பெறவுள்ளன. எனவே பக்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்திற்கு வருகை தருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5-4)

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

(குப்பிழான்)

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல்-10. 30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.


தொடர்ந்து 19 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இரதோற்சவமும், மறுநாள் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்த உற்சவமும், நடைபெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5-4-18)

## மகா யாக ஹோமம்

(யாழ்ப்பாணம்)

மாவை கலட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் கிராம முன்னேற்றத்திற்கான மகா யாக ஹோம வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இவ் யாகம் நாளை 8 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் நாளை மறுதினம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (5-4)



யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கொவிட்-19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் பங்களிப்பில் ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.
(படம்: ரவிசாந்)

## கும்பாபிஷேகம்

(குப்பிழான்)

குப்பிழான் வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலய மஹோற்சவ பிராயச்சித்த கும்பாபிஷேகம் நாளை மறுதினம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

காலை-8.30 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிளவில் அபிஷேகம், பூஜை என்பனவும் நடைபெறும். (5-4-18)

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

(குப்பிழான்)

ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலய நூதன வசந்த மண்டப , வைரவர் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் 6 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

மஹாகும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18)

## உறுப்பினர் தாக்கப்பட்டமைக்கு தவிசாளர் கண்டனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் இ.யோகேஸ்வரன் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் தனது கண்டன அறிக்கையில்,

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் இ.யோகேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தாக்குதலுக்கு உள்ளானமை கண்டனத்திற்குரியது.

பொது வாழ்வில் அர்ப்பணிப்போடு சேவையாற்றிவருபவர்கள் மீது மேற்கொள்ளப்படும் மிலேச்சத்தனமான தாக்குதல்கள் தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் சமூகப் பணியில் ஈடுபட்டு வருபவர்களையும் சமாதானத்தை விரும்புபவர்களையும் அச்சுறுத்தும் செயற்பாடாகும்.

இவ்வாறான செயற்பாடுகளை ஒட்டுமொத்த சமூகமும் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும். அத்துடன் சட்டமும் தன் கடமையை செய்ய முன்வர வேண்டும் என மேலும் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். (5-4-30)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தர பாடங்களில் ஒன்றான ஆங்கில பாடக் கருத்தரங்கு யாழ்.பல்கலைக் கழக மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறையினர் ஏற்பாட்டில் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

ஆர்வமுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்ற முடியும்.

மேலும் வருகை தரும் அனைவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வருகை தருமாறும் ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (5-4)

## தென்மராட்சியில் வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-வெள்ளாம் போக்கட்டி பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தொழிலுக்கு சென்றுவிட்டு உழவியந்திரத்தில் வீடு திரும்பிய நபரை குழுவொன்று வழிமறித்து வாளால் வெட்டி காயப்படுத்தியதுடன், அவர் பயணித்த உழவியந்திரயரையும் எரித்துள்ளது. இதில் மீசாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த 40 வயதான நபர் ஒருவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு ஊடகவியலாளர்களுக்குத் தடை

## வினோ எம்.பி கண்டனம்

(கொழும்பு)

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும் ஊடகவியலாளர்களின் அனுமதி மறுப்பானது பொது மக்கள் உண்மைச் செய்திகளை அறிந்து விடக்கூடாது என்பதுடன் மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்தையோ, அரச அதிகாரிகளையோ பொது வெளியில், ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பிரச்சினைகளை கொண்டு வரக்கூடாது என்ற உண்மைகளை மறைக்கும் செயற்பாடாகும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போது செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்காதிருக்கும் சுற்று நிருபம் தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் தான் செய்தியாளர்களை சந்திக்க முடியுமென்றால், முடிவுகளை அறிவிக்க வேண்டுமென்றால் மக்கள் பிரதிநிதிகளை அழைக்கவும் தேவையில்லை.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அழைக்க தேவையில்லை. மாவட்ட, பிரதேச அபிவிருத்தி விடயங்களை அதிகாரிகளுடன் பேசி விட்டு ஊடக சந்திப்பை நடத்த முடியும்.



இது முற்றிலும் உண்மைகளை மறைக்கும் விடயமாகும். ஊடகவியலாளர்களின் தனித்துவமான, உண்மைச் செய்திகளை சேகரிக்கும் அவர்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு சவால் விடுக்கும் செயற்பாடாகும்.

மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவர்கள் தவறாக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கும் உண்மைகளை சொல்லாது விடப்படுவதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கும்.

பாராளுமன்றத்தில் விவாதங்களை நேரலையாக ஒளிபரப்ப ஊடகங்கள் அனுமதிக்கப்படும் போது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க மறுக்கப்படுவது அரசாங்கத்தின் மீது சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது.

உள்ளூர் செய்தியாளர்களை சந்தேக கண்கொண்டு பார்க்கப்படுவது அவர்களின் நேர்மை, துணிச்சல், பக்கம் சாரா நடுநிலை மீது கை வைக்கும் ஓர் அரச அடக்கு முறையாகவே தெரிகிறது.

உண்மைகள் எழுதப்படும் போது, வெளிக்கொணரப்படும்போது மக்கள் விழித்தெழுவதும் மக்கள் மனங்களில் மாற்றம் வருவதும், அதனால் எதிர்க்கட்சி ஆளும் கட்சியாவதும், ஆளும் கட்சி எதிர்க்கட்சியாவதும் ஜனநாயக நடைமுறை மாற்றங்களாகும்.

எனவே ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களினதும் குரல் வளைகளை நெரிக்கும், சுதந்திரத்தை பறிக்கும் செயற்பாடுகளை நிறுத்தி உண்மைகளையும் பொய்யான விடயங்களையும் வெளி உலகுக்கும், மக்களுக்கும் கொண்டு சேர்க்க ஊடகங்களை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கு அனுமதிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(நி-4)


## சிவபூமி முதியோர் இல்லம் தொல்புரம்,சுழிபுரம்

எமது சிவபூமி முதியோர் இல்லம் 07.04.2007 இல் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய ஆண்டுவிழா நாளில் எமக்கு ஆசிகளையும் ஆதரவுகளையும் வழங்கிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

கலாநிதி.ஆறு.திருமுருகன்
தலைவர்

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில்.

**புதிய அனுமதி**

- அறுபது வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- சைவபோசனம் மட்டும்.
- எவரது ஆதரவும் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை.

நேர்முக உரையாடல் மூலம் பொருத்தமானவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

தலைமை அலுவலகம், கோண்டாவில்
Sivapoomi@Gmail.com
T.P:021 222 7938 (6478)

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில்.



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: மூலம்
கி.பா: 35 ¾ செவ்,சூரி 8 ல்
உயரம்: 6'3"
தகைமை/தொழில்: M.B.B.S மருத்துவர்
எதிர்பார்ப்பு:-டாக்டர், இஞ்சினியர்,லோயர்,
உள்நாடு மட்டும்
தொ.இ: B/11726

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 34 ¼ செவ் 5 சூரி 10 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L (T.O) Work – Restaurant, (German PR இல்லை)
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண் ஜேர்மன் PR உள்ள பெண் வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: B/111728

பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 34 ½ செவ் 7 சூரி 5 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: M.A பொருளாதார சமூக உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், உள்நாடு மட்டும்
தொ.இ: B/111729

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 32 ¾ செவ் 11 சூரி 5 ல்
உயரம்: 172cm
தகைமை/தொழில்: BSc,MSC ,Work-Teacher
எதிர்பார்ப்பு: அழகிய, குடும்பபாங்கான படித்த பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11730

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1972 இந்து நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 23 செவ்,சூரி 2 ல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:. BIO, BCS, Work-Hospital (Permanent Private) அவுஸ்ரேலியா
எதிர்பார்ப்பு: Doctor, Engineer,Accountant, அவுஸ்ரேலியாவில்லுள்ள மணமகன் அல்லது போக விரும்புவர்கள்
தொ.இ: G/2906

பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: சுவாதி
கி.பா: செவ் 2 சூரி 9 ல்
உயரம்: 152CM
தகைமை/தொழில்: MBBS Doctor
எதிர்பார்ப்பு: மருத்துவர் பொறியிலாளர், கணக்காளர், வங்கி, உள் நாடு மட்டும்
தொ.இ: G/2931

பிறப்பு: 1980 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 41 ½ செவ் 12 சூரி 9 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது வெளிநாடு.
தொ.இ: G/2951

பிறப்பு: 1976 இந்து நட்சத்திரம்: பூரம்
கி.பா: 48 செவ் 12 சூரி 10 ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA பட்டதாரி, தொழில் ஆசிரியை
எதிர்பார்ப்பு: பட்ட்தாரி அரச தனியார் உத்தியோகம், உள்நாடு வெளிநாடு.
தொ.இ: G/3011

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## பதவி வெற்றிடம்

### முகாமைத்துவ உதவியாளர்
( இருபாலாரும் )

**தகைமை**

– க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்,
– 01.04.2021 இல் 25 வயது பூர்த்தியாகி இருத்தல்,
– யாழ். நகர மையத்தில் இருந்து 6 Km சுற்றளவிற்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல்.

**மேற்குறிப்பிட்ட கட்டாய தகைமைகளுடன்**

- கணினி தமிழ் ரைப்பிங் தெரிந்திருத்தல்.
- ஆங்கிலம், சிங்களம் பேசும் ஆற்றல்

என்பன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய ( தொ.பே இலக்கம் உட்பட ) விண்ணப்பத்தை,

பொது முகாமையாளர்,
வலம்புரி,
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் சேவையினை நடத்தக் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் திருமுறிகண்டி இந்துபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நடமாடும் சேவைகள் நடத்தப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைக்கருகில் மேற்படி முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுகின்றன.

தமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட தூரத்திலுள்ள பிரதேச செயலகத்திற்கே செல்ல வேண்டியுள்ள நிலையில் சமுர்த்திக் கொடுப்பனவுகள் போன்ற உதவிகளை நடமாடும் சேவைகள் மூலம் இரு கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்களும் பெற்றுக் கொள்வதற்கு வழியேற்படுத்த வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் போக்குவரத்து நெருக்கடிக்கு மத்தியில் ஒட்டுசுட்டான் செல்ல வேண்டியுள்ளதாகவும் நடமாடும் சேவை மூலம் முக்கிய தேவைகளை தமக்கு நிறை வேற்றுவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்தனர். (5-4-350)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி அபிமான விற்பனை சந்தைகள் ஒட்டுசுட்டான் மற்றும் மாங்குளம் சமுர்த்தி வங்கிகளில் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த. அகிலன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (படம்: தவசீலன்)

# குடும்ப விபரங்கள் திரட்டும் பொலிஸார் அச்சத்தின் மத்தியில் மக்கள்

(நெளுக்குளம்)

**வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வசித்து வரும் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்ற பொலிஸார் அங்கு தங்கியுள்ள குடும்ப உறுப்பினர்களின் விபரங்களை திரட்டும் படிவம் ஒன்றினை வழங்கிவிட்டு சென்றதுடன் இரு தினங்களில் அவற்றை பெற்றுக்கொள்வதற்கு வருவதாகவும் குடும்ப விபரங்களில் உள்ளடக்கப்பட்ட விபரங்களை வழங்குமாறும் கோரிவிட்டுச் சென்றுள்ளனர் .**

எவ்விதமாக தெளிவுபடுத்தும் அறிவுறுத்தல்கள் மற்றும் காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படாமல் இவ்வாறு குடும்ப விபரங்களை கோருவதால் பொது மக்கள் மத்தியில் ஒரு அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருகையில், நேற்று முன்தினம் முதல் பூந்தோட்டம் பகுதியில் வசிக்கும் மக்களிடம் சென்ற பொலிஸார் வீடுகளில் வசிப்பவர்களின் பெயர், முகவரி, தொழில், தேசிய அடையாள அட்டையின் இலக்கம், தொலைபேசி இலக்கம் போன்ற முக்கிய தகவல்களை கோரிய விண்ணப்பப்படிவம் ஒன்றினை வழங்கி வருவதுடன் அவ்விபரங்களை சேகரிப்பதற்கு மீண்டும் வருகை தரவுள்ளதாகவும் அப்படிவத்தில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை நிரப்பி கையளிக்குமாறும் தெரிவித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு பொலிஸாரினால் குடும்ப விபரங்கள் சேகரிப்பதற்கு காரணங்கள் தெரியாமல் மக்கள் மத்தியில் ஒரு அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாகவும், பொது மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (5-4-299)


# மணல் டிப்பர்கள் பயணிப்பதால் உள்ளூர் வீதிகள் சேதம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் முக்கிய உள்ளூர் வீதிகள் சேதமடைவதற்கு டிப்பர்கள் பயணிப்பதே காரணம் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆற்றுப்படுக்கைகளில் இருந்து டிப்பர்கள், உழவு இயந்திரங்கள் மூலம் மணல் எடுத்துச் செல்லப்படுவதன் காரணமாக உள்ளூர் வீதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன.

நட்டாங்கண்டல் வழியாக சிறாட்டிக்குளம் செல்கின்ற வீதி மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு சேதமடைந்து காணப்படுகிறது.



இது தொடர்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்ற கூட்டங்களில் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும் உரிய நடவடிக்கைகள் எடுக் கப்படாததன் காரணமாக தொடர்ச்சியாக டிப்பர்கள் உள்ளூர் வீதிகளில் பயணிக்கின்றன.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்களும் பொது அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன. (5-4-350)

# பொலிஸ் எனத் தெரிவித்து 5 பவுண் நகை கொள்ளை

(நெளுக்குளம்)

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் பொலிஸார் என தெரிவித்து 5 பவுண் நகை கொள்ளையிடப்பட்டுள்ள தாக வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கார் ஒன்றில் சென்ற சிலர் வவுனியா தம்பனை புளியங்குளம் மற்றும் பத்தினியார் மகிழங்குளம் பகுதிகளில் உள்ள வீடுகளிற்கு சென்று தங்களைப் பொலிஸார் என அடையாளப்படுத்திக்கொண்டு, வீட்டைச் சோதனை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர் கள் அவர்களை நம்பி அனுமதித்த நிலையில் வீட்டில் சோதனை செய்வது போல பாசாங்கு செய்துவிட்டு அங்கிருந்த தங்க ஆபரணங்களை களவாடிக் கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(5-4-299)

# சிறுவர் அபிவிருத்திக் கூட்டங்களில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச சபைகளின் பெண் உறுப்பினர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதனை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

2018 ஆம் ஆண்டு பிரதேச சபை தேர்தலினூடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 17 பெண் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் கிரிசலிஸ் எனும் அரச சார்பற்ற நிறுவனத்தின் வழிகாட்டலினூடாக பாராளுமன்றத்தில் காணப்படும் பெண் உறுப்பினர்களுக்கான ஒன்றியம் போன்று, முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களுக்கான ஒன்றியமாக பெண்கள் சிறுவர்கள் நல மேம்பாட்டினை இலக்காக கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

இவ் ஒன்றியத்தினூடாக 2021 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு மாவட்ட செயலாளரை நேற்று முன்தினம் சந்தித்தனர்.

இதன்போது உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் மாவட்ட செயலாளருக்கு மகஜர் ஒன்றினை கையளித்தனர்.

மகஜரில் பாலியல் வன்முறை, சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்படும் மதுபான விற்பனை, வீட்டுத்திட்ட பிரச்சினைகள் மற்றும் நுண் நிதி கடன் தொடர்பான சவால்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திற் கொண்டு, பாலியல் வன்முறை தொடர்பான பிரச்சினைகளுக்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு அமைவாக மாதாந்த மாவட்ட சிறுவர் அபிவிருத்தி கூட்டத்திற்கு உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்வதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார். (5-4-350)

# கரும்புத் தோட்டக் காணியில் 150 ஏக்கரில் பயிர்ச்செய்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டக் காணியில் 150 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் உபஉணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்கந்தபுரம் பொது மண்டபத்தில் 7 பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கூடி இத்தீர்மானத்தினை எடுத்துள்ளனர்.

அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை தொடங்கி உள்ள நிலையில் கரும்புத் தோட்டக் காணியான 196 ஏக்கரில் 150 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் உபஉணவுப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்வது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இக்காணியில் தென்னைகள், கட்டடங்கள், பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலப்பரப்பினை கழித்தே 150 ஏக்கரில் உபஉணவுப்பயிர்ச்செய்கை மேற்கொள்வது எனவும் எதிர்காலத்தில் கரும்புத் தோட்டக் காணியில் நஞ்சற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.(5-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

07.04.2021
பங்குனி 25, புதன்கிழமை,
ஏகாதசி பின்னிரவு 5.14 மணிவரை
அவிட்டம் பின்னிரவு 6.03 மணிவரை
சுபநேரம் 4.38-6.08 மணிவரை
இராகுகாலம் 12.08-1.38 மணிவரை
சந்திராஷ்டமம்: புனர்பூசம்
சர்வதேச சுகாதார தினம், ஏகாதசி விரதம்.

வளவன்


மேஷம்

புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழிலில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.


ரிஷபம்

எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், புதிய திட்டங்கள் திட்டுவீர்கள்.


மிதுனம்

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு, செய்தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.


கடகம்

எளிதில் உணர்ச்சிவசப்படுவதை தவிர்ப்பது நல்லது, முன்னேற்றம் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.


சிம்மம்

நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், ஆரோக்கியமான நாள்.


கன்னி

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் வெற்றி பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.


துலாம்

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


விருச்சிகம்

இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்புண்டு.


தனுசு

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


மகரம்

தொழில் நலன் கருதி புதிய நபர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.


கும்பம்

குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள், தேக நலனில் அக்கறை காட்ட முற்படுவீர்கள், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.


மீனம்

பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

படிப்பு என்பது அறிவினால் வரும்;- பண்பு என்பது படிப்பால் வரும்

# பண்டிகைக் காலத்தில் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படாது - இராணுவத் தளபதி



(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படாது என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் கொழும்பிலிருந்து ஏனைய பகுதிகளுக்கு வெளியேறுபவர்கள் மீது விரைவான அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் கொரோனா வைரஸைத் தொடர்ந்து கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு பொதுமக்கள் ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கையுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## புதுவருடத்தின் பின் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதன்படி, புது வருடத்தின் பின்னர் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுகாதார ஆலோசனைக்கு அமைய கோவையொன்றை பல்கலைக்கழகங்களுக்கு அறிமுகப்படுத்தவுள்ளதாக அந்த ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் தற்போது பரீட்சைகளை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் அதிகரித்ததைத் தொடர்ந்து பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## 'பீல்ட் மார்ஷல்' பதவிக்கு சம்பளமோ, ஓய்வூதியமோ இல்லை


(கொழும்பு)

இலங்கையில் "பீல்ட் மார்ஷல்" பதவி வகிப்பவர்களுக்கு இராணுவத்தால் சம்பளமோ, ஓய்வூதியமோ வழங்கப்படாது. ஆனால் அவர்களது வாழ்நாள் வரையில் பீல்ட் மார்ஷல் பதவி நீடிக்குமென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது இதை தெரிவித்தார்.

பீல்ட் மார்ஷல் பதவியென்பது இராணுவத்தில் உள்ள உயர் பதவி. இராணுவ சம்பிரதாயங்களுக்கு அமைவாக பீல்ட் மார்ஷல் பதவியும் அதற்கு இணையான கடற்படையினரின் பதவியும் அப்பதவியைப் பெறுபவர்கள் வாழ்நாள் வரையில் நீடிக்கும். ஆனால் இராணுவத்தால் சம்பளமோ, ஓய்வூதியமோ வழங்கப்படாது என தெரிவித்தார். (நி-4)

## சிவப்பு சீனி விலை குறைப்பு



(கொழும்பு)

எதிர்வரும் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு சிவப்பு சீனி ஒரு கிலோவின் விலையை 10 ரூபாவால் குறைப்பதாக இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார். (நி-4)

# மாகாணசபைத் தேர்தல் முறைமையை மாற்றியமைக்கும் திட்டம் வாபஸ்?

## அமைச்சர்களின் எதிர்ப்பே காரணம்

(கொழும்பு)

அமைச்சர்களின் கடும் எதிர்ப்பால் மாகாண சபைத் தேர்தல் முறையை மாற்றியமைக்கும் திட்டத்தை அரசாங்கம் வாபஸ் பெறப்போவதாக நம்பகரமாகத் தெரிய வருவதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பு நடந்தது.

மாகாண, உள்ளூராட்சி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் கடந்த அமைச்சரவை சந்திப்பின்போது, மாகாண சபைத் தேர்தல் முறையை மாற்றியமைக்கும் யோசனையை சமர்ப்பித்திருந்தார்.

அதற்கெதிராக, அமைச்சர்களான விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, உதய பிரபாத் கம்மன்பில, டளஸ் அழகப்பெரும உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் கடுமையாக எதிர்ப்பு வெளியிட்டனர்.

கட்சித்தலைவர்கள் மாநாட்டை நடத்தி இதுபற்றி இறுதி முடிவை எடுக்கும்படி அப்போது ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டதற்கு அமைவாகவே மேற்படி சந்திப்பு நேற்று நடந்தது.

இந்த சந்திப்பில் அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் கலந்துகொள்ளவில்லை. அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நடந்த இச்சந்திப்பில் ஏனைய அமைச்சர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதில், புதிதாக முன்மொழியப்பட்டுள்ள தேர்தல் முறை மாற்றத்தை அமைச்சர்கள் பலரும் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

குறிப்பாக ஒரு தொகுதியில் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடலாம் என்கின்ற பிரிவை கடுமையாக எதிர்த்து கருத்து வெளியிட்டிருக்கின்றார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

இவ்வாறு அமைச்சர்கள் பலரும் ஒவ்வொரு கருத்தை வெளியிட்டுள்ளனர்.

அதன் காரணமாக உத்தேச யோசனையை அரசாங்கம் வாபஸ் பெறும் என்றே அரச மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஆட்டைக் காணோம்

முன்னொரு காலத்தில் கோணங்கி பட்டினம் என்ற ஊரில் மந்தை மேய்ப்பன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனிடம் நிறைய ஆடுகள் இருந்தன. அவற்றை அவனால் 'காவல்காக்க முடியவில்லை. தினமும் ஒவ்வொரு ஆட்டை ஓநாய்கள் கவர்ந்து சென்றன.

இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் வேட்டை நாய் இரண்டை வாங்கி காவலுக்கு வைத்தான். அவற்றிற்கு தினமும் மாமிச உணவு கொடுக்க வேண்டுமே. இதற்காக தினமும் இரண்டு எலிகளை அடித்து உணவாக கொடுத்தான்.


அப்படியிருந்தும் தினமும் ஒரு ஆடு காணாமல் போனது. இதனால் மேய்ப்பனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேட்டை நாய்கள் மீது கோபம் கோபமாக வந்தது.

ஒருநாள் என்ன நடக்கிறது என்பதை மறைந்திருந்து கவனித்தான். அப்பொழுது ஓநாய் ஒன்று வந்து ஆட்டை கொன்று இழுத்து சென்றது. அது சாப்பிட்டுவிட்டு போடும் மீதி ஆட்டை இந்த வேட்டை நாய்கள் இன்பமாக தின்றன. இப்படி நடப்பதை கண்ட அவன் திடுக்கிட்டான். மிகவும் சோகமாக உட்கார்ந்தான்.

அப்பொழுது அந்த வழியாக முனிவர் ஒருவர் வந்தார். அவரிடம் தன் கஷ்டத்தை சொல்லி அழுதான் மந்தை மேய்ப்பவன்.

அதற்கு முனிவர், "மகனே யாருக்கும் வயிறார உணவு கொடுத்தால் தான் வேலை செய்வர். நீயோ இரண்டு எலிகளை மாத்திரம் நாய்களுக்கு உணவாக கொடுக்கிறாய். இது அவைகளுக்கு பத்தாது.

"நீ அவ்வப்போது உன் வீட்டிற்காக ஆட்டை வெட்டுகிறாய் அல்லவா? அந்த மாமிசத்திலிருந்து சிறு துண்டுகளை



யாவது எடுத்து இந்த நாய்களுக்கு கொடுக்க வேண்டும். அப்படி கொடுத்தால்தான் அவைகள் உனக்காக நன்கு வேலை செய்யும்," என்றார்.

அதன்படியே செய்வதாக ஒப்பு கொண்டான் மேய்ப்பன். அப்படியே செய்து வந்தான்.

அதற்கு நல்ல பலன் கிடைத்தது. அன்றிலிருந்து மந்தையில் ஆடுகள் குறையவில்லை.

மறுநாள் ஓநாய்கள் ஆட்டை தின்ன வந்தன. அதை கண்ட வேட்டை நாய்கள் அவைகளை விரட்டின. "என்ன இத்தனை நாட்களாக நாங்கள் விட்டு சென்ற மாமிசத்தை தின்றீர்கள். இப்பொழுது உங்களுக்கு என்னவாயிற்று?" என்றன.

"உங்களது எச்சில் மாமிசம் எங்களுக்கு வேண்டாம். எங்கள் தலைவர் வயிறு நிறைய எங்களுக்கு மாமிசம் கொடுக்கிறார்" என்றன.

அவற்றை மீறி ஓநாய்கள் மந்தைக்குள் நுழைந்தன. அவைகள் மீது பாய்ந்து கிழித்து கொன்றன வேட்டை நாய்கள். மிகவும் மகிழ்ச்சி அடைந்தான் மந்தை மேய்ப்பன்.

**நீதி : நம்மிடம் வேலை செய்பவர்களுக்கு நாம் வயிறு நிறைய சாப்பாடு கொடுக்க வேண்டும். தகுதியான சம்பளம். கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு உண்மையாக உழைப்பர்.**

# மகாபாரதம்




*தருமன் தன்னை அடிமை என விற்ற பின்னும் உன்னை பிறர்க்கு அடிமையாக்க உரிமையுண்டு. சாத்திரத்தில் சான்றுள்ளது. ஆனால் உண்மையில் இது அநீதி தான்.*

*"ஆனாலும் நீதி சாத்திரத்தில் இதற்கு இடமிருக்கிறது. உன் சார்பில் சாத்திரம் இல்லை.*

*தையலே முறையோ என நீ முறையிட்டதால் இதனை நான் சொன்னேன். இன்று தீங்கை தடுக்கும் திறமில்லாதவனாக இருக்கிறேன்" என்று கூறி தலை கவிழ்ந்தார்.*

*"பிதாமகரே தர்ம நெறியை நன்கு உரைத்தீர். ராவணன் சீதையை அசோகவனத்தில் வைத்த பின் சான்றோர் நிறைந்த சபையில் அச் செய்தியைக் கூறிய போது "நீ செய்தது சரி என்றனராம்.*

*அதைப் போலவே இருக்கிறது இந்த அவை. பேய் ஆட்சி செய்தால், பிணத்தைத் தின்பதை போற்றும் சாத்திரங்கள்.*

*என்கணவரை சூதாட வற்புறுத்தியது தவறல்லவா. அது நேர்மையா[illegible] திட்டமிட்ட சதி அல்லவா.*

*மண்டபம் ஒன்று அமைத்து அதைக்காண அழைத்து, நாட்டைக் கவர நினைப்பது முறையா? பெண்களுடன் பிறந்த உங்கள் செய்கை பெண்பாவம் அல்லவா" என்று கையெடுத்து கும்பிட்டு அழுது துடித்தாள் பாஞ்சாலி.*

*அழும் பாஞ்சாலியை நோக்கி, துச்சாதனன் தகாத வார்த்தைகளை உரைத்தான். அவள் ஆடை குலைய நின்றாள். துச்சாதனன் அவள் குழல் பற்றி இழுத்தான்.*

*இது கண்டு பீமன் கோபம் அடைந்தான். தருமரை நோக்கி "அண்ணா, மாதர்குல விளக்கை ஆடி இழந்து விட்டாய். தருமத்தை கொன்றுவிட்டாய்.*

*சக்கரவர்த்தி என்ற மேலான நிலை பெற்ற நம்மை ஒரு கணத்தில் தொலைத்துவிட்டாய். துருபதன் மகளையும் அடிமையாக்கினாய்" என்று கனல் கக்க பேசி தம்பி சகாதேவா "எரி தழல்கொண்டுவா-அண்ணன் கையை எரித்திடுவோம்" என்றான்.*

*பீமன் உரையை மறுத்தான் பார்த்தன் (அருச்சுணன்). "சினம் என்னும் தீ உம் அறிவை சுட்டெரிக்கிறது.*


*"தருமத்தின் வாழ்வுதனைச்சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும்" என்றும் கட்டுண்டோம் பொறுத்திருப்போம். காலம் மாறும் தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்" என்றும் பீமனிடம் கூறினான் பார்த்தன்.*


*(தொடரும்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக சட்டசபைத் தேர்தல் வாக்குகளை பதிவு செய்த பிரபலங்கள்

தமிழக சட்டப்பேரவை தேர்தல் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.தமிழகத்தின் மிக முக்கிய தலைவர்களான ஜெயலலிதா மற்றும் கருணாநிதி ஆகிய இருவரும் இன்றி நடைபெறுகின்ற முதலாவது தேர்தல் என்பதால் மிகப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



ஸ்ராலின்



விஜய்



கமல்ஹாசன்



அஜித்,ஷாலினி


தமிழிசை


குஷ்பு


தொல்.திருமாவளவன்


சூர்யா, கார்த்தி


ரஜினிகாந்த்


தனுஷ்


சிவகார்த்திகேயன்


விக்ரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# எலும்பு ஒட்டி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name-Ormocarpum cochinchinense**
**Family - Fabaceae**

இது ஓர் முக்கியமான மூலிகைத் தாவரமாகும். பெருஞ்செடி இனத்தைச் சேர்ந்தது. இது இலங்கை, இந்தியா, மலேசியா, ஜப்பான், தாய்வான், பசுபிக்தீவுகள், பிலிப்பைன்ஸ், சீனா போன்ற நாடுகளில் காணப்படுகிறது. இலங்கையில் காட்டுப்பிரதேசங்களிலும் மலைப்பிரதேசங்களிலும் பரம்பிக்காணப்படும். வடமாகாணத்தில் முல்லைத்தீவுக் காடுகளில் மையப் பகுதிகளில் இதன் பரம்பல் அதிகம்.

இச்செடி எப்போதும் பச்சையாக இருக்கும். இது 6 அடி முதல் 9 அடி உயரம் வரை வளரக்கூடியது. இதன் தண்டுகள் முதிர்ந்தால் கெட்டியாகி விடும். இதன் இலைகள் எதிர் அடுக்கில் அமைந்திருக்கும். அவை 9-17 இணுக்குகள் இருக்கும். இவை 1.5 செ.மீ. முதல் 2.5 செ.மீ. நீளம் இருக்கும். இலைகள் முதிர்ந்து பழுத்தால் கறுப்பாக இருக்கும்.

பூக்கள் மஞ்சள் அல்லது வெண்மையாக இருக்கும். பூக்க்ள் வாடினால் பசை போல இருக்கும். விதைகள் நீள்வட்ட வடிவத்தில் மண்ணிறத்தில் இருக்கும். ஆனி முதல் புரட்டாதி மாதம்வரை பூக்களைக் காணலாம். இவை விதைமூலம் இனவிருத்தி செய்யலாம்.

எலும்பு ஒட்டி வளமான மண்ணில் நன்கு வளரும். மிதமான சீதோஸ்ணம் போதுமானது.

எலும்பு ஒட்டி செடியில் கல்சியம் அதிகமாக இருப்பதை தற்போதைய ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

எலும்பு ஒட்டி இலைகளை கசக்கி உருட்டும்போது பசை போல் இருக்கும்.

இதன் இலைகள் குச்சிகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டிதண்ணீர்விட்டு நன்கு சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் சமஅளவு தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து போத்தலில் விட்டு வைத்துக்கொண்டு மூங்கில் தர்ப்பையில் வெள்ளைத்துணி சுற்றி என்பு முறிவு ஏற்பட்ட இடத்தில் கட்டுப்போடுவார்கள்.

பின் அதன்மீது இந்த மருந்தை நனைத்துக்கொண்டிருப்பர். இப்படிச் செய்யும் போது ஒரு சில மாதங்களில் அடிபட்ட இடம் குணமடைந்து விடும். எலும்பு ஒட்டி மூலிகை எலு ம்புகளை இரும்பாக்கும்.

இந்த எலும்பு ஒட்டி மூலிகை கிடைத்தால் மாதம் ஒருமுறையாவது 5 கிராம் அளவு இலைகளை எடுத்து அரைத்து பாலில் கலந்து அருந்தி வந்தால் எலும்புகள் நன்கு உறுதிபெறும். உடல் வலிமை பெறும். எலும்புகளை வலுப்படுத்துவதில் இது ஒரு சிறந்த மூலிகையாகும்.



**எலும்பு ஒட்டி தழை ஜூஸ்**

எலும்பு ஒட்டி தழை
பசுவின் பால்

தழைகளை மட்டும் நரம்பு நீக்கி சேகரித்துக் கொள்ள வேண்டும். இலைகளை அரைத்து 5 கிராம் அளவு எடுத்து காய்ச்சிய பசுவின்பால் 200 மில்லியில் கலந்து எடுக்க என்புகள் பலம்பெறும். மூட்டு வலிகளுக்கும் சிறந்தது.

முட்டை வெள்ளைக்கரு, எலும்பு ஒட்டி இலைச்சாறு, உழுத்தம்மா, வெந்தயம் இவற்றைச் சேர்த்து பத்து போல் **(Poultice)** தயார் செய்து மூட்டுவலி உள்ள இடங்களில் பத்து போடலாம். 20 தடவைகள் பத்துபோடலாம். வலியும் குறைந்து மூட்டுவலி உள்ளவர்கள் இலைகளில் 4,5 எடுத்து வாயில்போட்டு மென்று சாப்பிடலாம்.

உலர்ந்த எலும்பு ஒட்டி இலை 1 பங்கிற்கு 3 பங்கு நீர்விட்டு 1/3 பங்காக வற்றக் காய்ச்சி 50 மில்லி அளவு காலை, மாலை எடுக்க என்புகள் பலப்படும். மூட்டுவலி, நாரிவலியும் தணியும். என்பு முறிவு ஏற்பட்டவர்களும் இக் குடிநீரை பயன்படுத்தலாம்.

எலும்பு ஒட்டி இலைகளை நீர்விடாமல் அரைத்த விழுதை முறிவு ஏற்பட்ட இடத்தில் தடவி சுத்தமான துணியால் மூடி மூங்கில் குச்சிகொண்டு கட்டி அசையாமல் வைக்க வேண்டும்.




நவீன சிகிச்சை, அறுவை சிகிச்சை முறைகள் அறிமுகமாவதற்கு முன்பு பாரம்பரிய சிகிச்சையில் என்பு ஒட்டி மூலிகை பாவனையில் இருந்துள்ளது.

இவைகளை நிழலில் உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு நெய்யில் எடுக்க என்புகள் பலப்படும்.

கல்சியம் சத்து என்புகளுக்கு மிகவும் அவசியம். என்பு ஒட்டி இலைகளில் கல்சியத்து அதிகளவில் உண்டு. பண்டைய காலத்தில் இதன் காரணமாகவே சித்தர்கள் என்பு ஒட்டி மூலிகையை என்பு முறிவிற்கு முதன்மையாக பயன்படுத்தி உள்ளார்கள்.

என்பு ஒட்டி இலைகளை விளக்கெண்ணெயில் வதக்கி பத்துப்போல வைத்துக் கட்டலாம்.

என்பு ஒட்டி இலை, நறு லங்கம் துளிர், புளியிலை, மஞ்சள், உப்பு கூட்டி இடித்து வைத்துக் கட்டலாம்.

பழைய நோக்கள் இருக்கும்போது என்பு ஒட்டி இலைகள் உலர்ந்தது, விண்ணாங்கு இலை, சுக்கு, மஞ்சள், எல்லாவற்றையும் சேர்த்து மூன்று நாட்கள் வைத்துக்கட்ட வேண்டும்.

என்புகள் முறிந்த வீக்கத்தில் முடக்கி நீட்ட இளக்க மருந்து என்புஒட்டி இலை, தேறியிலை, குறிஞ்சா இலை செத்தல் தேங்காய் இடித்துப் பிழிந்த பால்விட்டு அவித்துக் கட்டவும்.

இந்த மருந்துகளுடன் என்பு ஒட்டி இலை சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் பூசி வரவும்.

என்பு ஒட்டி இலைகளை அரிந்து ஒரு பானையில் போட்டு தண்ணீர்விட்டு வாய் சீலையால் வேடுகட்டி, அதன் மேல் பச்சைமஞ்சள், பருத்திக்கொட்டை, உலர்ந்த என்பு ஒட்டி இலைகளை இடித்து இரண்டு பொட்டிணியாகக் கட்டி அவித்து மூன்று நேரம் ஒற்றடமிட்டு பின்பு கீழ்க் கூறிய பற்றைபோட பழைய நோ, சுளுக்கு, என்புமுறிவுகள் பொருந்தியபின்பு ஏற்படும் நோக்கள், மூட்டுவலி, நாரிவலி போன்றன நீங்கும். பற்றிற்கு என்பு ஒட்டி இலை, மஞ்சள், சாளியா, முட்டை வெள்ளைக்கரு விட்டரைத்து பற்றுப்போட்டுவரவும்.

விலி (பட்டை), மாவிலங்கைப் பட்டை, முருங்கை (பட்டை) உலர்த்தி சமஅளவு எடுத்து இடித்து நன்றாக கொதித்த 300 மில்லி வெந்நீரில் ஊறப் போட்டு கிளறிப் பிசைந்து முறித்த இடத்திலணைத்து மூங்கில் சீவி வைத்துக்கட்டி ஒன்றாக என்புகள் பொருந்தியதும் என்பு ஒட்டி இலைகளை தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சிய எண்ணெயை என்பு பொருந்திய பின் பூசவும்.

என்பு முறிவு பொருந்திய பின்பு என்புகளை பலப்படுத்த என்பு ஒட்டி இலை, மாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம் எண்ணெய் இறக்குமதிக்கு தடை; பேக்கரி உரிமையாளர் சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

**நாட்டில் பாம் எண்ணெய் இறக்குமதியை முழுமையாகத் தடைசெய்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தினால் பேக்கரி உற்பத்தி முற்றிலும் சரிந்து விடும் என்று அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

பேக்கரி பொருட்களில் அத்தியாவசியமான மார்கரைன் பாம் எண்ணெயை பயன்படுத்தி தயாரிக்கப்படுவதால், அதைத் தடை செய்வது அனைத்து பேக்கரி பொருட்களிலும் பல சிக்கல்களை ஏற்படுத்துகிறது.

எனவே அரசாங்கம் எடுக்கும் இந்த முடிவை கடுமையாக எதிர்ப்பதாக அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (நி-4)

## அரசியலையும் ஆட்சியையும் தீர்மானிப்பதில்

# முக்கிய பங்கு எனக்கு உண்டு

## மார்தட்டுகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

"இலங்கையின் அரசியலையும் ஆட்சியையும் தீர்மானிக்கும் சக்தி என்னிடம் உண்டு. இரண்டு பிரதான தேர்தல்களின்போது அதனை நான் நிரூபித்துள்ளேன். இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் தெரியும்."

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

"2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியைத் தழுவினார். அவர் கொழும்பிலிருந்து சொந்த ஊரான அம்பாந்தோட்டைக்குச் சென்றார். அவர் அங்கு முடங்கியிருக்க வேண்டும் எனச் சிலர் விரும்பினார்.

ஆனால், அவரை அங்கிருந்து கொழும்பு - நுகேகொடவுக்கு அழைத்து வந்து மாபெரும் மக்கள் பேரணியை நடத்திக் காட்டினேன்.



மீண்டும் அவர் தலைமையிலான அரசை நிறுவுவதில் பெரும் பங்கு வகித்தவன் நான்.

அதேவேளை, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பாளராக நியமிப்பது என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் சச்சரவுகள் எழுந்தபோது, கோட்டாபய ராஜபக்ஷவையே நியமிக்கவேண்டும்என்று உறுதியாக நின்று அவரைத் தேர்தல் களத்தில் வெற்றியடையச்செய்ததிலும் எனக்கு மிக முக்கிய பங்குண்டு.

அந்தவகையில்தான் இலங்கையின் அரசியலையும் ஆட்சியையும் தீர்மானிக்கின்ற சக்தி எனது தலைமையிலான கட்சியிடம் இருக்கின்றது என்பதை வெளிப்படையாகக் கூறுகின்றேன். இதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் மறுக்கமாட்டார்கள்.

தேசிய சுதந்திர முன்னணி ஆளும் கட்சியில் பிரதான பங்காளிக் கட்சி. எமது கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன்சேரப் போகின்றது எனவும், நாம் எதிர்க்கட்சியுடன் கைகோர்க்கப் போகின்றோம் என்றும் அரசுக்குள் இருக்கும் ஒரு சில அணியினர் கூறி வருகின்றனர்.

மாகாண சபைத் தேர்தலையொட்டி அரசியல் களத்தில் இவ்வாறு வெவ்வேறுபட்ட கருத்துக்கள் வருவது வழமை. அரசுக்குள் இருக்கும் ஒரு சக்தியினர் என் மீதும் என் கட்சி மீதும் சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை நாம் இன்னமும் எடுக்கவில்லை.

அரசுடன் இணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம்" என விமல் வீரவன்ச தெரிவித்தார். (நி-4)

## அரசியல் சக்தியின் பின்னணியில் பேராயர்; ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றச்சாட்டு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்ட கருத்துத் தொடர்பில் மீள் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பேராயரின் கருத்திற்குப் பின்னால் அரசியல் சக்தி ஒன்று இருப்பதாகவும் அதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

### தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குறை ஒரு குறையல்ல!

என்னை விட யோக்கியன் இந்த உலகத்திலே வேறு யாரும் இல்லை சேர் என்றார் ஒருத்தர். அவரைவிட அயோக்கியன் வேறு யாரும் இருக்க முடியாது என்ற முடிவுக்கு நான் உடனே வந்துவிட்டேன். மனிதனுக்கு இருக்கிற மிகப்பெரிய குறையே தன்னிடம் இருக்கிற குறை அவனுக்குத் தெரியாமல் போவது தான்! ஆனால் அடுத்தவனிடம் இருக்கிற குறை இவனுக்குத் தெளிவாகத் தெரியும்.

ஒரு ஒட்டகம் கொக்கைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டதாம். என்ன கேள்வி தெரியுமா?

"உன் கழுத்து ஏன் இப்படி வளைந்து போயிருக்கு" என்றதாம். அதற்கு உடம்பே வளைந்திருக்கு...இது போய் கொக்கை கிண்டல் செய்கிறது.

இன்றைக்கு மனித சுபாவமும் கிட்டத்தட்ட இப்படித்தான் இருக்கு.

இந்த உலகத்திலே குறையில்லாத மனிதர்கள் யாருமே கிடையாது. நாம் உட்பட என்பதை முதலில் நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். ஒரு ஊரிலே ஒரு விற்பனை நிலையம் இருந்தது. செல்லப் பிராணிகளை விற்பனை செய்கின்ற நிலையம் இருந்தது. செல்லப் பிராணிகளை விற்பனை செய்கின்ற நிலையம் அது. நாய்...கிளி...பூனை...இப்படி நிறைய வைத்து விற்பனை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

நாய்க்குட்டி விற்பனை செய்கின்ற பகுதியில் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். விற்பனை செய்கின்ற ஆளிடம் விலை கேட்டுக் கொண்டிருந்தான்.

அதோ இருக்கின்றதே அந்த நாய்க்குட்டி என்ன விலை? என்றான்.

ஆயிரம் ரூபாய்...என்றார்.

சரி அது வேண்டாம்...இது என்ன விலை? என்றான். ஐந்நூறு ரூபாய் என்றார்.

இந்த சின்ன பையன் கையிலே வைத்திருந்தது 50 ரூபாய். அதனால் இதைவிட குறைச்சலாக கிடைக்குமா என்று பார்த்தான்.

அந்தக் கடையில் ஒரு மூலையில். சரியாக கவனிக்கப்படாமல் ஒரு நாய்க்குட்டி படுத்துக்கிடந்தது. பாவமாக கத்திக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததுமே இவனுக்கு அது மிகவும் பிடித்துப் போய்விட்டது. உடனே அந்தக் கடைக்காரரைப் பார்த்து, அதோ அந்த மூலையில் படுத்துக்கிடக்கின்றதே. அந்த நாய்க்குட்டி என்ன விலை? என்று கேட்டான்.

தம்பி...அதற்கு ஒரு கால் ஊனம்...அதனால் அது உன்னுடன் குதித்து விளையாடவோ ஓடவோ முடியாது...என்றார் அவர். அது தெரிந்துதான் கேட்கின்றேன். அதனுடைய விலை எவ்வளவு அதை மட்டும் சொல்லுங்களேன் என்றான். தம்பி...இது கால் ஊனமுள்ள ஒரு நாய்...இதைப் போய் காசு கொடுத்து வாங்குவதற்கு யாராவது பிரியப்படுவார்களா? இதை உனக்கு இலவசமாகவே தருகின்றேன் எடுத்துக் கொண்டு போயேன் என்றார்.

இதைக் கேட்டதும் அந்தச் சிறுவனுக்குக் கோபம் வந்துவிட்டது. நீங்கள் ஒன்றும் சும்மா கொடுக்க வேண்டாம். இந்தாங்க ஐம்பது ரூபாய். இதை வைத்துக் கொள்ளுங்கள். நாய்க்குட்டியைக் கொடுங்க...என்றான்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஆச்சரியமாக இருந்தது. சரி என்று பணத்தை வாங்கிக் கொண்டு நாய்க்குட்டியைத் தூக்கிக் கொடுத்தார்.

இந்தச் சிறுவன் அந்த நாய்க்குட்டியை இரண்டு கையாலேயும் வாங்கினான். மார்போடு பிரியமாக சேர்த்து அணைத்துக் கொண்டான். தெருவிலே இறங்கி நடந்தான். கடைக்காரர் ஆச்சரியமாக அவனைப் பார்க்கின்றார். அப்பொழுது தான் அவருக்கு ஒரு விடயம் புரிகின்றது. அந்தச் சிறுவன் தெருவிலே...நாய்க்குட்டியை மார்போடு அணைத்துக் கொண்டு விந்தி விந்தி நடந்து போய்க்கொண்டிருந்தான். ஆமாம் அவனுக்கும் ஒரு கால் ஊனம்.

இந்த நாய்க்குட்டியை யாருமே வாங்க மாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தார். குறையுள்ள அதற்கும் ஒரு எஜமானன் கிடைத்து விட்டான். அதனாலே ஊனம் ஒரு குறையல்ல என்ற உண்மையை அந்தக் கடைக்காரர் புரிந்துகொண்டார்.

நம்முடைய ஆள் ஒருத்தர் கொஞ்சம் வயசானவர். எழுந்து சரியாக நடக்க முடியாது...சாய்வு நாற்காலியிலே எப்பொழுதும் உட்கார்ந்திருப்பார்.

அவர் தனக்குத் துணையாக ஒரு நாயைப் பக்கத்திலே வைத்திருந்தார். அதுவும் ரொம்ப வயசான ஒரு நாய். எழுந்திருக்கவே சிரமப்படும். நடக்கவும் முடியாது. அவர் பக்கத்திலேயே இதுவும் சோர்ந்துபோய் படுத்திருக்கும்.

அந்தப் பெரியவரைப் பார்க்க வந்த ஒருத்தர் கேட்டார்.

"ஏன்...ஒரு சின்னப் பையனை உங்களுக்குத் துணையாக வைத்திருக்க கூடாதா? இந்த நாயை உங்களுக்குப் பாதுகாப்பாக வைத்திருக்கிறீர்களே...உங்களுக்கு ஒரு ஆபத்து என்றால் இது எப்படி உங்களுக்கு உதவ முடியும்" என்றார்.

"எனக்கு ஒரு ஆபத்து என்றால் அந்த சமயத்திலே இந்த நாய் என்னை தனியாக விட்டுவிட்டு ஓடிப் போயிடாமல் இருக்கும் இல்லையா... அதனாலே தான் இதை வைத்திருக்கிறேன்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 07 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இங்ஙனம் கையளிக்கும்போது இங்குள்ள நூல்கள், தளபாடங்கள் யாவற்றையும் உங்களிடம் ஒப்படைக்குமாறு எனக்குப் பணித்துள்ளார்கள். எனவே, தாங்கள் தயவு செய்து தங்கள் உத்தியோகத்தர் ஒருவரை நாளையோ அன்றி வருகின்ற திங்கட்கிழமையோ வந்து இவற்றைப் பொறுப்பேற்கு மாறு பணிப்பீர்களாக, இடையில் விடுமுறை நாட்கள் வருவதால் இங்ஙனம் நாட்களை நான் குறிப்பிட்டுள்ளேன். எங்கள் நூலக சங்கத்தார் 31.12.1934 வரையுள்ள கடன் கொடுக்குமதியாவற்றையும் தீர்த்து விட்டார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்ஙனம் தங்கள் விசுவாசமுள்ள ஊழியன்
க. மு. செல்லப்பா

நிர்வாகத் திறமையுள்ள நகர சபைத் தலைவர் உடனடியாக மறுநாளே பதில் எழுதியிருந்தார்.

இலக்கம் 2-98
நகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
22-12-1934.

மத்திய இலவச தமிழ் நூல் நிலையம், யாழ்ப்பாணம்

தாங்கள் 21.12.34 இல் எழுதிய கடிதத்தின் பிரகாரம் எங்கள் நகரசபை நூல்நிலையத்துக்கான செலவினைஒதுக்கியுள்ளபடியால், அது 1.1.1935 முதல் உங்கள் நூல் நிலையத்தைப் பொறுப்பேற்கும் என்பதை அறியத் தருகிறேன். நகரசபைச் செயலாளரிடம் நூல் நிலையத்தை விடுமுறை நாட்களில் வசதிபோல பொறுப்பேற்கும் வண்ணம் பணித்துள்ளேன். ஆகவே, தாங்கள் அவரிடம் அறிவுறுத்த வேண்டியவற்றைக் கூறவும்.

இங்ஙனம் தங்கள் விசுவாசமுள்ள ஊழியன்
ஆர். ஆர். நல்லையா
தலைவர் நகரசபை,
யாழ்ப்பாணம்.

**அரியாலை ஊரைச் சேர்ந்தவரும் நகரசபையின் (U.D.C) பிரதிநிதியாகவும் இருந்த ஆர். சுப்பிரமணியம் அடிக்கடி நகரசபைக் கூட்டத்தில் நூலகத்துக்கு நிதியுதவி கொடுக்குமாறு பிரேரித்து வந்தார். அவரே நகரசபையினர் நூலகத்தைப் பொறுப்பேற்று நடத்துவதற்கும் காரணகர்த்தா ஆவார். 1.1.1935 தொடக்கம், நூல்நிலையம் நகரசபையின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது.**

சங்கத்தார் நடத்தி வந்த நூல் நிலையத்தை நகர சபையாரிடம் கையளித்தல் பற்றிக் காரிய நிர்வாக சபையினர் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பொதுச் சபையின் கருத்தறிவதற்குக் கூட்டிய விசேடப் பொதுக் கூட்டம் யாழ் மத்திய கல்லூரியின் 20.12.1934 வியாழக்கிழமை மாலை, வணக்கத்துக்குரிய கலாநிதி தம்பையா தலைமையிற் கூடியது.

தலைவர் நூலகத்தை நகரசபையாரிடம் கையளித்தல் வேண்டும் என்னும் பிரேரணையைப் பிரேரித்தார். அதனை முகாந்திரம் சி. கணபதிப்பிள்ளை அனுமதித்தார். அதுபற்றிப் பலர் தங்கள் கருத்துக்களைச் சாதகமாகவும் பாதகமாகவும் பேசிய பின் வாக்கெடுப்புக்கு விட்டபோது பிரேரணைக்குச் சாதகமாக 24 வாக்குகளும், எதிராக 13 வாக்குகளும் கிடைத்தன. தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானம் நிறைவேறியபின் தலைவர் தமது இரண்டாவது பிரேரணையாக மேற்படி சங்கம்1.1.1935 முதல் கலைக்கப்பட வேண்டும் என்று பிரேரித்தார். அதனை அப்புக்காத்தர் கனகநாயகம் அனுமதித்தார். உடனடியாக அதனை எதிர்த்து நூல்நிலையச் சபையைக் குலைத்தலாகாது என்று தெல்லிப்பழை புறொக்ரர் ப.குமாரசுவாமி பிரேரித்தபோது அதனை நீராவியடி புறொக்ரர் கே. அய்யாத்துரை அனுமதித்தார். அவரைத் தொடர்ந்து நெவின்ஸ் செல்வத்துரை கே.வ.இராசையா சபையைக் குலைத்தலாகாது என்று பேசினார்கள். இவ்வாறாகப் பலர் அபிப்பிராய பேதங் கொண்ட வேளையில், பிரேரணை வாக்களிப்புக்கு விடப்பட்டபோது 23 வாக்குகளால் தோல்வியுற்றது.

பின்னர் காரியதரிசி செல்லப்பா சங்கத்தாரிடம் இருந்த பணத்தில் இருநூறு ரூபாவைச் சங்கம் கையிருப்பில் வைத்துக் கொண்டு எஞ்சிய தொகைக்கு நூல்கள் வாங்கி நூலகத்துக்குக் கொடுத்தல் வேண்டும் என்று பிரேரித்தார். அதனை அப்புக்காத்தர் கனகநாயகம் அனுமதித்தார். ஆனால் புறொக்ரர் வி.குமாரசுவாமி அவர்கள் பிரேரணைக்கு மாறாக பிரேரித்தும், எஸ். இளையதம்பி, வி. கே. இராசையா, பி. ஜி. சுவாம்பிள்ளை முதலானோர் இவரை ஆதரித்துப் பேசினர். முடிவில் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது வாக்குகள் சரிசமமாகக் கிடைக்கவே, தலைவர் தமது வாக்கைப் பிரேரணைக்கு மாறாக அளித்ததும் செல்லப்பா பிரேரணை தோல்வி கண்டது.

மத்திய இலவச நூல்நிலையத்தை நகரசபையிடம் ஒப்படைத்த பின்னர் 22.4.1935இல் டபிள்யூ டி. நைல்ஸ் தலைமையில் ஒரு காரிய நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றது. அதற்குப்பின்னர் 31.5.1935 இல் தலைவர் நீதவான் ஸி. குமாரசுவாமி தலைமையில் இறுதியான நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சங்கத்தாரிடம் எஞ்சியிருந்த பணத்தைக் கிராம சபைகளின் வாசிகசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கலாமா? என்னும் விடயம் பேசப்பட்டது. என். சின்னத்தம்பி 125-ரூபாவை கிராம சங்கங்களுக்குக் கொடுக்கலாம் எனப் பிரேரித்ததை க.மு.செல்லப்பா ஆதரிக்கவே, பிரேரணை நிறைவேறியது. க. மு. செல்லப்பா அதுகாறும் நூலகராகக் கடமையாற்றிய வி. எஸ். இராசரத்தினத்திற்கு பல மாதங்களுக்குப் பொதுவாக 75 ரூபாவை அலவன்சாகக் கொடுக்கலாம் எனப் பிரேரித்தார். இதை புறொக்ரர் முருகேசம்பிள்ளை அனுமதித்தார். பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பெற்றது. பின்னர் க.மு. செல்லப்பா தங்களிடம் எஞ்சியிருந்த பணத்தை வட மாகாண அரசாங்க அதிபர் மூலம் கிராம சபைகளுக்கு வழங்க வேண்டு மெனப் பிரேரித்தார். இதனை கே. கனகசபை அனுமதித்ததும் பிரேரணை ஏற்றுக்கொள்ளப் பெற்றது. இறுதியாக, தலைவரிடம், வி. குமாரசாமி தங்கள் சங்கத்தைக் குலைக்க வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பொதுச்சபை கூட்டப்பெற வேண்டும் என்றும், பிரேரித்த பிரேரணை செல்லப்பா அனுமதித்ததும் ஏற்றுக் கொள்ளப் பெற்றது. இத்துடன், பொதுச்சபை பின்னர் கூட்டப் பெறாமலேயே காரிய நிர்வாக சபைக் கடைசிக் கூட்டத் தோடு 31.5.1935இல் நூல் நிலையச் சங்கம் குலைந்தது.

### நூலகத்திற்கு நூலகர் தெரிவு

நகரசபை பொறுப்பெடுத்து நடத்திய நூல் நிலையத்திற்கு அனுபவமும் பொறுப்பும் வாய்ந்த நூலகர் ஒருவர் உடனடியாகத் தேவையாயிருந்தது. முன்னர் நூலகராயிருந்த சி.எஸ். இராசரத்தினம்,மெற்றிக்குலேசன் சித்தியடைந்திருந்தார். அவரையே நூலகராக நியமிக்க வேண்டும் என்பது நகர சபைக் காரியதரசி, சக்கடத்தார் பாலசுப்பிரமணியத்தின் விருப்பம். ஆனால், பகிரங்கமாக விளம்பரப்படுத்தி, விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, நேர்முகப் பரீட்சை மூலம் தெரிய வேண்டும் என்பது பெறுவிதி. காலமோ உத்தியோகங்கள் கிடைக்காத காலம். பெரும் உத்தியோகத்தர் பலர் வேலையாட்கள் குறைப்பினால் உத்தியோகமிழந்து வீட்டில் சோம்பியிருந்த காலம். பட்டதாரிகள் பலர் முப்பத்தைந்து ரூபாவுக்குப் பாடசாலைகளில் படிப்பித்த காலம் அது.

நகரசபையார் நூலகர் வேலைக்கு விளம்பரம் செய்ததும் பட்டதாரிகள் உட்பட பலர் விண்ணப்பம் செய்தனர். முன்னரே மனப்பதிவு பெற்றிருந்த சி. எஸ். இராசரத்தினம் நேர்முகப் பரீட்சையின் பின் நூலகராகத் தெரியப் பெற்றார். அக்காலத்திலே கொழுத்த சம்பளம் மாதம் நாற்பது ரூபாய். காலை ஏழு மணி தொடக்கம் மாலை ஏழு மணி வரை நூலகர் கடமை. நூலகர் தனியொருவராய்த் தொழிலாளி வேலைகள், பணியாளர் வேலைகள், எழுத்தாளர் வேலைகள், மேற்பார்வை வேலைகள், பதிவு வேலைகள், நூல்களைத் தூசு தட்டி அடுக்கும் வேலைகள் யாவற்றையும் செய்தார்.

### நூலகத்தின் இடம் பெயர்வுகள்

ஆஸ்பத்திரி வீதியில் விசாலமான கடையொன்றில் நடைபெற்று வந்த நூலகம், நகரசபையார் பொறுப்பேற்றதும் வேறு இடத்திற்கு மாற்றப்பெற்றது. அந்நாளில் U.D.C. என்னும் நகரசபை தனக்கே சொந்தமான கட்டடமோ நிலமோ இல்லாமல் யாழ்ப்பாணம் கச்சேரியில், ஒரு பகுதியில், நடைபெற்று வந்தது.

இவ்வாறாக இட நெருக்கடியிருந்த வேளையில் நகரசபையார் நூலகத்துக்கு வேறு இடந்தேடி பிரதான வீதியில், ஒரு சந்திக்கு அருகில், அபூபக்கர் கட்டடத்தில் விசாலமான முகப்புக் கடையொன்றை மாதம் முப்பத்தைந்து ரூபாய் வாடகைக்கு எடுத்தார்கள். அது விசாலமானதாக இருந்தபோதிலும், சந்தடியுள்ள சூழலில் அமைந்ததாகும். படிப்பதற்கு ஏற்ற சுற்றாடலில் விசாலமான மண்டபம் தேடித்திரிந்த நகரசபையார், தமக்கென ஒரு பாரிய நகரசபை மண்டபத்தைக் கட்டி எழுப்பத் தொடங்கிய காலம் அது.

யாழ்ப்பாண வாடி வீட்டுக்குத் தென்திசையில் சைவ வித்தியா விருத்திச் சங்க காரியாலயக்கட்டடத்தின் அருகில் உள்ள மாடிக் கட்டடத்தின் மேல் மண்டபத்தைப் புத்தூர் மழவராயர் குடும்பத்தாரிடம் மாதம் அறுபத்தைந்து ரூபாவுக்கு வாடகையாகப் பெற்றார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கல்வி அமைச்சு பறிக்கப்பட்டமைக்கு மனோ கணேசன் சீற்றம்



(பதுளை)

தனித் தமிழ்ப் பிரிவு என்றால், கொடுப்பதை வாங்கிக் கொண்டு மூடிக்கொண்டு இருக்க வேண்டும். இதுதான் வித்தியாசம். எழுதிவைத்துக் கொள்ளுங்கள். மீண்டும் நாம் வருவோம். மீண்டும் பெறுவோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.


ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு பறிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவர் முகநூலில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

மத்திய மாகாணத்தில் ஆரம்பித்து, இப்போது ஊவா மாகாணம் வரை, மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு என்ற இயந்திரம் ஒழிக்கப்பட்டு, தமிழ்ப் பிரிவு ஆகிவிட்டது.

தனியான தமிழ்க் கல்வி அமைச்சு என்றால் மாகாண சபை வரவு - செலவுத் திட்டத்தில், எங்கள் பாடசாலை பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகத் தனியான நிதி ஒதுக்கீடு கிடைக்கும்.

தனித் தமிழ்ப் பிரிவு என்றால், கொடுப்பதை வாங்கிக் கொண்டு மூடிக்கொண்டு இருக்க வேண்டும். இதுதான் வித்தியாசம். மீண்டும் நாம் வருவோம். மீண்டும் பெறுவோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்—எதற்கு — எப்படி



## ஆலயங்களின் வகையும்–அற்புதங்களும்

(தொடர்ச்சி)

பஞ்ச சபை போல சப்த (ஏழு) விடங்க சிவத் தலங்களும் உள்ளன. "விடங்கம்" என்றால் "உளியால் செதுக்கப்படாதவர்" என்று அர்த்தம்.

திருவாரூர், திருநள்ளாறு, நாகை, திருக்காரைவாசல், திருக்குவளை, திருவாய்மூர், வேதாரண்யம் ஆகிய 7 ஊர்களில் உள்ள சிவத்தலங்களில் உளியால் செதுக்கப்படாத லிங்கங்கள் அமைந்துள்ளன. எனவே இந்த 7 தலங்களும் சப்த விடங்க தலங்கள் என்று கூறப்படுகின்றன.

சிவபெருமானின் வீரத்தைப் பெருமையாகச் சொல்லும் சிவாலயங்கள் தமிழ்நாட்டில் 8 உள்ளன. இந்த 8 கோவில்களும் அட்ட வீராட்டானக் கோவில்கள் என்று அழைக்கப்படுகின்றன.

திருக்கண்டியூர், திருக்கோவிலூர், திருவதிகை, திருப்பறியலூர், வழுவூர், திருவிற்குடி, திருமுறுக்கை, திருக்கடவூர் ஆகியவையே அட்ட வீராட்டான தலங்கள் என்று போற்றப்படுகிறது. இதே மாதிரித்தான் நாடெங்கும் உள்ள ஜோதிர்லிங்க தலங்களான 12 சிவாலயங்கள் தனித்துவம் கொண்டவை.

இந்தியாவில் ஆயிரக்கணக்கான சிவத் தலங்கள் இருந்தாலும் 274 சிவத்தலங்கள் தேவாரம் பாடல் பெற்ற தலங்களாக உள்ளன. அந்த 274 சிவத்தலங்களில் 264 சிவத் தலங்கள் தமிழ்நாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தலங்களில் நான்கு சிவத் தலங்கள் முக்தி தரவல்ல சிவத் தலங்கள் என்று நம் முன்னோர்கள் கண்டறிந்து குறிப்பிட்டுள்ளனர்.

அதாவது பிறக்க முக்தி தருவது - திருவாரூர். தரிசனம் செய்ய முக்தி தருவது - சிதம்பரம். நினைக்க முக்தி தருவது - திருவண்ணாமலை. இறக்க முக்தி தருவது - காசி.

திருவாசக பாடல்களில் இடம்பெற்ற பெருந்துறை, சிதம்பரம், திருவண்ணாமலை, உத்திர கோசமங்கை, திருக்கழுக்குன்றம், திருத்தோணிபுரம், திருவாரூர் ஆகிய 7 ஆலயங்களும் திருவாசகத் திருத்தலங்கள் எனப்படுகின்றன.

அதுபோல தேவார வைப்புத் தலங்கள், திருவிசைப்பா திருத்தலங்கள், நாயன்மார் அவதாரத் தலங்கள் என்று சிவாலயங்களை நம் முன்னோர்கள் வகுத்து வைத்துள்ளனர்.

வைணவத்திலும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட 108 திருத் தலங்கள் திவ்ய தேசங்கள் எனப்படுகின்றன. இவற்றில் 105 தலங்கள் இந்தியாவில் உள்ளன.

ஒரு திவ்யதேசம் நேபாளத்திலும் மற்ற இரண்டும் பரமபதமாகவும் திருப்பாற் கடலாகவும் உள்ளன. 108 திவ்ய தேசங்களில் 90 சதவீத ஆலயங்கள் தமிழ்நாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த திவ்ய தேசங்களுக்கு தம் வாழ்நாளில் ஒரு தடவையாவது சென்று அத்தலத்துக்குரிய பாடல்களைப் பாடுதல் என்பது வைணவ சமய வழிபாடாக உள்ளது.

108 திவ்ய தேசம் போல நம் முன்னோர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் 9 தலங்களை நவ திருப்பதி என்று அடையாளப்படுத்தியுள்ளனர். ஸ்ரீவைகுண்டம் (சூரியன்), நத்தம் (சந்திரன்), திருக்கோளூர் (செவ்வாய்), திருப்புளியங்குடி (புதன்), ஆழ்வார்திருநகரி (குரு), தென்திருப்பேரை (சுக்கிரன்), பெருங்குளம் (சனி), திருத்தொலைவில்லிமங்கலம் (ராகு - கேது) ஆகியவையே நவ திருப்பதியாகும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜை உயிரிழப்பு

(கொழும்பு)

குளியாப்பிட்டிய பகுதியில் புத்தர் சிலைக்கு சேதம் விளைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜையொருவர் உயிரிழந்துள்ளார்.

வாரியபொல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த நபருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து அவர் வாரியபொல வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதே உயிரிழந்துள்ளார். (நி-4)

## நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு வெளியுறவு அமைச்சகத்தின் ஒப்புதல் தேவையில்லை

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் வெளியுறவு அமைச்சகத்தின் ஒப்புதலை பெறத் தேவையில்லை என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

2020 மார்ச் மாதத்தில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு அமைய உள்வரும் பயணிகள் அல்லது சுற்றுலாப் பயணிகள் அனைவரும் வெளியுறவு அமைச்சகம் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## நாடு திரும்பிய 22 பேருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

நேற்றுக் காலை வரையான 24 மணி நேரத்தில் நாட்டில் புதிதாக 159 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொவிட்-19 தொற்று பரவலை தடுக்கும் செயலணி குறிப்பிட்டுள்ளது. அவர்களில் 22 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களாவர். எஞ்சிய தொற்றாளர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 150 |
| தக்காளி | 80 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 50 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 170 | 180 | 200 |
| பூசணி | 70 | 50 | 80 |
| புடோல் | 120 | 90 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 220 | 100-250 | 280 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 220 | 260 | 240 |
| வெண்டிக்காய் | 90 | 90 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 110 | 120 | 40 |
| பீற்றூட் | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 130 | 180 | 160 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 800 |
| போஞ்சி | 160 | 220 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 140 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 140 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50-70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 160 | — | 240 |
| முள்ளங்கி | 50 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 80 | 30 | 30 |
| ஈரப்பலா | 100 | — | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களிடையே மோதல்; மந்திகையில் சம்பவம்

(கரணவாய்)

மாலுசந்திக்கும் மந்திகை மடத்தடி பகுதிக்கும் இடையில் நேற்று இளைஞர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடையே குறித்த மோதல் இடம்பெற்றுள்ளது.

பெருமளவான இளைஞர்கள் வீதியில் சத்தம் போட்டு அடாவடித்தனத்தில் ஈடுபட்டனர்.

குறித்த சமயத்தில் வீதியில் நின்ற ஒருவரை நீர் செல்லும் வாய்க்காலுக்குள் தள்ளி வீழ்த்தி அவர் மேல் சைக்கிளையும் போட்டதுடன் வீதியில் நின்ற முச்சக்கர வண்டிக்கும் சேதம் ஏற்படுத்தினர்.

இதனால் அவ் வீதியில் சில நிமிடங்கள் பதற்ற நிலை ஏற்பட்டது. இது தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-60)

# வியாபார நிலையங்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்

(நெளுக்குளம்)

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் ஏழாம் திகதிவரை உணவு கையாளும் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் பத்திற்கும் மேற்பட்ட வியாபார நிலையங்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக வவுனியா மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலாவதித்திகதி முடிவடைந்த உணவுப்பொருட்கள், பாவனைக்குதவாத தானிய வகைகள், சுகாதார சீர்கேடான சாப்பாட்டுக் கடைகள் போன்றவை தொடர்பாக விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இதுவரை 22 வியாபார நிலையங்களிற்கு மேல் மேற்பார்வை செய்துள்ளோம். அவற்றில் 10 வியாபார நிலையங்களிற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் வியாபார நிலையங்கள் மற்றும் உணவகங்களில் கையாள வேண்டிய சுகாதார விடயங்கள் தொடர்பாக அவற்றின் உரிமையாளர்களிற்கு கருத்தரங்குகள் மூலமாக ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (5-4-299)

# பிரமந்தனாறு குளத்தின்கீழ் 500 ஏக்கர் சிறுபோக செய்கை மேற்கொள்ள தீர்மானம்

(முறிகண்டி)

*கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன் தலைமையில் இடம்பெற்றது.*

குறித்த கலந்துரையாடலின் போது அக்குளத்தின் கீழ் 500 ஏக்கரில் செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானம் எட்டப்பட்டது.

12 அடி கொள்ளளவு கொண்ட பிரமந்தனாறு குளம் 3155 ஏக்கர் அடி நீர் கொள்ளளவு கொண்டதாகும். தற்போது 11' 06" நீர் காணப்படும் நிலையில் 2925 ஏக்கர் அடி நீர் காணப்படுவதாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் செந்தில் குமரன் தெரிவித்துள்ளார்.

நீரின் அளவிற்கு அமைவாக இம்முறை 500 ஏக்கர் சிறுபோகம் மேற்கொள்ள முடியும் என தீர்மானம் எட்டப்பட்டது. அதற்கு அமைவாக அடுத்த வாரம் செய்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சிறிமோகன், கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன், நீர்ப்பாசன பொறியியலாளர் செந்தில்குமரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், கமநல சேவைகள் மற்றும் கால்நடை திணைக்களங்களின் அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கடந்த வருடம் குறித்த குளத்தின் கீழ் 450 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் இம்முறை மேலதிகமாக 50 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், கால்நடைகளுக்கான புல் வளர்ப்பிற்கும் மானியம் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-100)

# புத்தாண்டை முன்னிட்டு யாழ்-கொழும்பு விசேட புகையிரத சேவை

(குப்பிழான)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மக்களின் பயணங்களை இலகுவாக்கும் நோக்குடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி முதல் விசேட புகையிரத சேவைகள் இடம்பெறவுள்ளதாகப் புகையிரதத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை - யாழ்ப்பாணம் விசேட புகையிரத சேவை இரவு 09 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமாகும். இந்த விசேட புகையிரத சேவை 9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் - கொழும்பு கோட்டை விசேட புகையிரத சேவை இரவு 9.50 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமாகும். மேற்படி விசேட புகையிரத சேவை 12, 15, 17, 19, 21 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் - குருநாகல் விசேட புகையிரத சேவை இரவு 12.30 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமாவதுடன் இந்த விசேட புகையிரத சேவை 12 ஆம் திகதி மட்டும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-18)




**சதுஸ்ரிகன்**

பிரச்சினை என்பது தொலைநோக்கி போலவே நீ பார்க்கும் பார்வையில் தான் எல்லாம் அடங்கி இருக்கின்றது அதை பெரிதாக நினைத்தால் பெரிதாகத் தான் தோன்றும் சிறியதாக நினைத்தால் பிரச்சினை உனக்கு ஒரு பொருட்டாகவே தெரியாது....




**சாயிசனந்தன்**



எந்த சோப்பு போட்டாலும் வெள்ளை கலர்ல தான் நுரை வருது.

அப்புறம் ஏன்?



சோப்பு மட்டும் கலர் கலரா இருக்கு !!!

**ஆதி**

தந்தை- எக்ஸாம் ஹாலில் தூங்கிட்டு வரேன்னு சொல்றியே, வெட்கமாயில்லை.

மகன்- நீங்கள் தானேப்பா கேள்விகளுக்கு விடை தெரியலைன்னா முழிச்சிட்டு இருக்காதே என்று சொன்னீங்க..



**யசிந்தா**

மனைவி- டிபன் வேணுமா?
கணவன்- சாய்ஸ் இருக்கா?
மனைவி-இரண்டு இருக்கு!
கணவன்-என்னென்ன?
மனைவி- வேணுமா? வேண்டாமா?



**அபி**

சார்...சார் என் பொண்டாட்டிய காணோம்...


யோ...இது போஸ்ட் ஆபிஸ்...



அய்யோ... சந்தோஷத்துல எங்க போறதுன்னே தெரியல..!

**நிறஞ்சலா**

ஆசிரியர்- முட்டைபோடும் மூன்று உயிரினம் பேர் சொல்லு.
மாணவன்- கணக்கு ரீச்சர்,பிசிக்ஸ் ரீச்சர், கெமிஸ்ரி ரீச்சர்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான மனச்சாட்சி இடி முழக்கத்திலும் அச்சமின்றித் துயிலும்!

– தாமஸ் முல்லர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆதிக்குடிகள் தமிழர்கள் என்று சொல்வதும் பயமா?

தமிழ் மக்களே இலங்கையின் ஆதிக்குடிகள் என்பதில் இருவேறு கருத்திற்கிடமில்லை.

தொல்லியல் திணைக்களம் மண்ணைத் தோண்டி அகழ்வாராய்ச்சி செய்தாலும் அங்கு கிடைக்கக்கூடியவை ஆதிசிவனின் அடையாளங்களேயன்றி வேறில்லை என்பதை தொல்லியல் திணைக்களம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இவையொருபுறமிருக்க, இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்று பாராளுமன்றத்தில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கூறியிருந்தார்.

சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட மகிந்த யாப்பா அபேவர்த்தனவை வாழ்த்திப் பேசும்போது, பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்; இந்த நாட்டின் ஆதிக்குடிகளின் தாய்மொழியாம் தமிழ் மொழியால் உங்களை வாழ்த்துகிறேன் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்று கூறியதுதான் தாமதம் சிங்களப் பேரினவாதிகள் கூக்குரலிட்டனர்.

நீதியரசர் விக்னேஸ்வரனின் அந்த உரை ஹன்சார்ட்டில் இடம்பெறக்கூடாதெனக் கோசம் போட்டனர்.

எனினும் நீதியரசரின் அந்த உரை ஹன்சார்ட்டில் வெளியாகியது.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கை சிங்கள பௌத்த நாடு என்றவாறான வரலாற்றைத் தோற்றுவிப்பதில் பௌத்த பிக்குகள் சிலரும் தொல்லியல் திணைக்களமும் கடுமையாகப் பாடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதை நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் மீண்டும் எடுத்துரைத்துள்ளார்.

உண்மையை எத்தனை தடவைகள் கூறினாலும் அதில் பழுதில்லை.

அந்த வகையில் ஓர் உண்மையை திரும்பத் திரும்ப கூறுவதால் அதன் கனதி மென்மேலும் வலிமை பெறும் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இருந்தும் இவ்விடத்தில் நம்மிடம் எழுகின்ற கேள்வி, தமிழ் மக்களே இலங்கையின் ஆதிக்குடிகள் என்று கூறுவதில் ஏனைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்னிற்பது ஏன்? என்பதுதான்.

ஆம், இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்றால், ஆதிசிவனுக்கு முதன்மையும் முக்கியத்துவமும் கொடுக்க வேண்டி வந்துவிடுமோ என்ற பயத்தால்தான் ஏனைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர்களே ஆதிக்குடிகள் என்பதைச் சொல்வதில் பின்னடிக்கின்றனர் என்பதைத் தவிர, வேறு காரணம் எதுவும் எமக்குத் தெரியவில்லை.

# அபாய வலயங்களில் அமைந்துள்ள 10 ஆயிரம் வீடுகளை அகற்றத் திட்டம்

## அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவியரீதியில் அபாய வலயங்களில் உள்ள 10 ஆயிரம் வீடுகளை அகற்ற திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் சமல் ராஜபக்ச பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

தேசிய கட்ட ஆய்வு நிறுவகத்தால் இவ்வாறான வீடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

வீடுகளிலிருந்து அகற்றப்படுவோருக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகளை கையகப் படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட பகுதிகளில் காணிகளை பெறுவதில் சில சிக்கல்கள் காணப்படுவதாகவும் அமைச்சர் சமல் ராஜபக்ச சுட்டிக் காட்டினார்.

சிக்கல்களை நிவர்த்தி செய்து வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சிலபகுதிகளில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேவையான காணிகள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சமல் ராஜபக்ச பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** அறுகுவெளி, மறவன்புலவுமத்தி, மறவன்புலவு, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கற்குளம், கோவில் புளியங்குளம், மருதோடை, நெடுங்கேணி, கோபுரம் (மொபிடெல்) நெடுங்கேணி, நீர்வழங்கல் சபை (ஒலுமடு), ஒலுமடு நெடுங்கேணி, ஊஞ்சல்கட்டி, ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு, பட்டிக்குடியிருப்பு சேனைப்பிலவு, சேனைப்பிலவு பாடசாலை, வெடிவைத்தகல் ஆகிய பிரதேசங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வீரபுரம், எல்லப் பர் மருதங்குளம், மறக்காறம்பளை- கணேசபுரம், தவசிக்குளம், அறுகம்புல்வெளி, பார. திபுரம், கூமாங்குளம், கூமாங்குளம்கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகர் இலுப்பைக்குளம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பாண்சின்னகுளம், பொன்னாவரசங்குளம், சாம்பல்தோட்டம் வீட்டுத் திட்டம், விநாயகபுரம் வீட்டுத் திட்டம், நெளுக்குளம் நீர்வழங் கல் சபை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** மாலுவாடி சந்தி, உயிலங்குளம், புதிய சில்க்ரோட், அகுடிக் கம்பனி பிறைவேட் (லிமிடெட்) கடல்உணவு களஞ்சியம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஐஸ் போதைப்பொருளுடன் இரு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கிண்ணியா ஊடாக மூதூருக்கு சென்று கொண்டிருந்த வான் ஒன்றிலிருந்து ஐஸ் போதைப்பொருட்களுடன் இளைஞர்கள் இருவர் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு கைது செய்யப்பட்டுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேக நபர்கள் இருவரையும் மேலதிக விசாரணைகளுக்காக கிண்ணியா பொலிஸாரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி வானில் சாரதியான கொழும்பு, வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞனும் மூதூர் ஜாயா வீதியைச் சேர்ந்த 25 வயது இளைஞனுமே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமாக காணப்பட்ட குறித்த வான் கிண்ணியா, கண்டலடியூற்று இராணுவ முகாம் பாதுகாப்பு சோதனைச் சாவடியில் வைத்து சோதனையிட்ட போது வானுக்குள் கோழிக் குஞ்சுகளை ஏற்றிக் கொண்டு அதற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப் பொருள் 5 கிராம் ஒரு பக்கெட்டும் ஒரு கிராம் கொண்ட மற்றுமொரு பக்கெட்டும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

திரும்பிப் போகும்போது ம-தனக்குள், 'யார் இந்த சாந்த மூர்த்தி! இவரிடம் மறுபடியும் வர என் மனம் ஆவல் கொள்கிறதே! ஆமாம், புத்தகம் படிக்காமல் ஒருவர் உயர்ந்தவராக முடியுமா? என்ன ஆச்சரியம்! அவரை மீண்டும் காண என் மனம் விரும்புகிறது. மறுபடியும் வா" என்று அவரும் கூறியிருக்கிறார். நாளை அல்லது நாளை மறுநாள் வருவேன்' என்று எண்ணியபடி சென்றார்.

இரண்டாம்முறையாக ம- ஸ்ரீராமகிருஷ்ணரை தரிசிக்க வந்த போது, அவர் தமது அறைக்குத் தென்கிழக்கிலுள்ள வராந்தாவில் சவரம் செய்துகொள்ளத் தயாராக இருந்தார். காலை எட்டுமணி. இன் னும் குளிர் இருந்தது. எனவே சால்வை போர்த்திக் கொண்டிருந்தார். அதில் சிவப்புக்கரை இருந்தது. ம-வைப் பார்த்ததும் 'ஓ! நீ வந்துவிட்டாயா? நல்லது. இங்கே உட்கார்' என்றார்.

பிறகு சவரம்செய்துகொள்ள உட்கார்ந்தார். இடையிடையே ம-வுடன் பேசவும் செய்தார். உடம்பில் போர்வை, கால்களில் செருப்பு, சிரித்த முகம், கொஞ்சம் திக்கலோடு வரும் பேச்சு.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம-விடம்): 'ஆமாம், உன் வீடு எங்கே இருக்கிறது?'

ம-: 'கல்கத்தாவில்.'

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'இங்கு எங்கே வந்தாய்?'

ம-: 'வராக நகரில் என் மூத்த சகோதரி வசிக்கிறாள், ஈசான் கவிராஜரின் வீடு.' (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2021 முதல் 13.04.2022 வரை



# பொருளாதார நிலை உயரும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

**மேட இராசி வாசகர்களே!**

பிறக்கும் தமிழ்ப் புத்தாண்டு, பெருமைகளைக் குவிக்கும் ஆண்டாக அமையப் போகின்றது. ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், தன ஸ்தானத்தில் சுக்கிரன் வீட்டில் பரிவர்த்தனை யோகம் பெற்று இருக்கின்றார். 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான், இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே இந்த ஆண்டு எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். மதிநுட்பத்துடன் செயற்பட்டு மக்கள் செல்வாக்கை பெறப் போகிறீர்கள்.

புத்தாண்டின் தொடக்கத்தில் கிரகங்கள் நிலைபெற்றிருக்கும் இடம் மற்றும் அவை பலமாக இருக்கின்றனவா? என்பதை முதலில் அறிந்து செயற்படுவது நல்லது. சுய ஜாதகம் பலம் பெற்றிருக்குமேயானால் கோட்சார ரீதியாக வரும் குறுக்கீடுகள் எதுவும் பாதிக்காது. நடைபெறும் திசாபுத்தி பலம் இழந்து இருக்குமேயானால் மனக்கசப்புகளும் மாற்றங்களும் வந்துசேரும். அதுபோன்ற அமைப்பு உள்ளவர்கள், யோகபலம் பெற்ற நாளில் அதற்குரிய தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். இந்த அடிப்படையில் உங்கள் இராசியில் சூரியன், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய 4 கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. 2 இல் ராகுவும் 8 இல் கேதுவும் இருந்து சர்ப்ப தோஷத்தை உருவாக்குகிறார்கள். தொழில் ஸ்தானத்தில் சொந்த வீட்டில் சனிபகவான் பலம் பெற்றிருக்கிறார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொல்லை தந்த எதிரிகளின் பலம் குறையும். புதிய ஒப்பந்தங்கள் வந்து பொருளாதார நிலையை உயர்த்தும்.

2 இல் ராகு இருப்பதால் வருமானம் திருப்திகரமாகவே இருக்கும். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டி, குடும்ப உறுப்பினர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவீர்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. இயல்பான வாழ்க்கையில் சில குறுக்கீடுகள் வரலாம். அதற்கு அஷ்டமத்தில் கேது சஞ்சரிப்பதே காரணம். எனவே, கணவன்-மனைவி இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். ஆரோக்கியத் தொல்லைகள் இடையிடையே வந்து கொண்டே இருக்கும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் அதில் இருந்து விடுபட இயலும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

புத்தாண்டு தொடக்கம் முதல் 13.9.2021 வரை, கும்ப இராசியில் அதிசார கதியில் குருபகவான் சஞ்சரிக்கின்றார். அதோடு 16.6.2021 முதல் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். 14.9.2021 முதல் 12.10.2021 வரை, மகர இராசியில் குருபகவான் வக்கிரம் பெறுகின்றார். எனவே, இந்த காலகட்டங்களில் நிதானமும், பொறுமையும் அதிகம் தேவைப்படும். எதிர்மறை சிந்தனைகள் அடிக்கடி வந்து அலைமோதும். அதைத் தவிர்த்து நேர்மறை சிந்தனைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள். பிடிவாத குணத்தால் சில பிரச்சினைகள் ஏற்படலாம். வருமானப் பற்றாக்குறையால், சேமிப்புகள் கரையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் அல்லது இடமாற்றங்கள் கைநழுவிச் செல்லலாம்.




**குருப்பெயர்ச்சி காலம்**

ஆண்டின் தொடக்கத்தில் கும்ப இராசியில் அதிசார கதியில் சஞ்சரிக்கும் குருபகவான், மீண்டும் வக்கிர கதியில் மகர இராசிக்கு வந்து, அதன் பிறகு 13.11.2021 அன்று முறையாக கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அதன்பிறகு 13.4.2022 இல் மீன இராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கின்றார். கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகின்றது. குருவின் பார்வை 3 ஆம் இடத்தில் பதிவதால், வெற்றிகள் ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே, வழக்குகளில் இருந்த தேக்கநிலை மாறும். தெளிவு பிறக்கும். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

குருவின் பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால், மனையில் மங்கல ஓசை கேட்கும். வாசல்வரை வந்து கைவிட்டுப் போன வரன்கள், மீண்டும் வந்து கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். வீடு கட்டும் முயற்சி, வெளிநாட்டு அனுகூலம், வாகன சேர்க்கை போன்றவை உருவாகும். 14-4-2022 அன்று குரு பகவான் மீன இராசிக்கு பெயர்ச்சியாகிறார். உங்கள் இராசிக்கு விரயாதிபதியாக விளங்கும் குரு, விரய ஸ்தானத்திலேயே பலம் பெறுவதால் வரவைக் காட்டிலும் செலவு கூடும். சுப விரயங்களை மேற்கொள்வதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து விடுபடலாம்.

**ராகு-கேது பெயர்ச்சி காலம்**

21.3.2022 அன்று மேடத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசியைப் பொறுத்தவரை ஜென்ம ராகுவும் சப்தம கேதுவுமாக விளங்குவதால், மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். தைரியமும் தன்னம்பிக்கையும் குறையும். எதையும் துணிந்து செய்ய இயலாது. ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு மருத்துவச் செலவு வரலாம். ஒரு சிலருக்கு இடமாற்றம், வீடுமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை உண்டாகும்.

**சனியின் வக்கிர காலம்**

12.5.2021 முதல் 26.9.2021 வரை, மகர இராசியில் சனி பகவான் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு தொழில் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி என்பதால், இக்காலத்தில் மிகுந்த விழிப்புணர்ச்சி தேவை. சூடுபிடித்த வியாபாரத்தில் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்காது.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

14.4.2021 முதல் 3.6.2021 வரை, 4.6.2021 முதல் 21.7.2021 வரை மற்றும் 24.10.2021 முதல் 7.12.2021 வரை, செவ்வாய் -சனி பார்வை உள்ளது. இக்காலத்தில் எதையும் துணிந்து செய்ய இயலாது. அனைவருமே கவனமுடன் இருக்க வேண்டிய நேரம் இது. நோய் தொற்று, இயற்கை சீற்றம் போன்றவற்றை சந்திக்க நேரிடும். உங்களைப் பொறுத்தவரை இராசிநாதனாக செவ்வாய் இருப்பதால், ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காது. குடும்பத்தில் அமைதி குறையும். 'செலவு அதிகரிக்கின்றதே' என்று கவலைப்படுவீர்கள். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டு உங்களுக்கு யோக வாய்ப்புகளை அள்ளித் தரும். ஆனால் தேக நலனில் கவனம் அவசியம். குரு பார்வையால் கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். தாய், தந்தை மற்றும் சகோதரர்களின் ஆதரவோடு இல்லறத்தை நல்லறமாக அமைத்துக் கொள்வீர்கள். பிள்ளைகளின் திருமண முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு கிடைக்கும். மறுக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் வழங்கப்படலாம்.

சனியின் வக்கிர காலத்தில் விழிப்புணர்ச்சி தேவை. செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபாடு செய்து வாருங்கள். வாழ்க்கை வளமாகும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

சதுர்த்தியன்று விரதமிருந்து விநாயகப்பெருமானை வழிபடுங்கள். குறிப்பாக யோகபலம் பெற்ற நாளில், கற்பக விநாயகர் வழிபாட்டை முறையாக செய்து வந்தால் முன்னேற்றம் கூடும். முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூக்கத்துக்கு...

ஒன்று அராலிமேற்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் நேற்று முன்தினம் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் தூக்கத்திற்கு சென்றதாகவும் காலையில் நீண்டநேரமாக தூக்கத்தில் இருந்து எழுந்திருக்காமையினால் உறவினர்கள் அவரை எழுப்பியபோது அவர் உயிரிழந்து இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கந்தசாமி ஜெயராசா (வயது - 54) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-3,104)

## மயிர்கொட்டி...

தாக்குதல் நடத்தியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நீமசிட்டி பகுதியில் கிளுவை வேலியில் மயிர்கொட்டிகள் (மசுக்குட்டி) இருப்பதாக கூறிய கும்பல் ஒன்று காணி உரிமையாளருடன் தர்க்கம் புரிந்துள்ளதுடன், நேற்றுக் காலை வேலிக்கு தீ வைத்து கொளுத்தியுள்ளது.

இதனையடுத்து காணி உரிமையாளர் தீயை அணைக்க சென்றிருந்தபோது காணி உரிமையாளர் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனையடுத்து தப்பியோடிய காணி உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (ம-3)

## ஒன்லைன் கேம்...

தொலைபேசியைப் பறித்தமையால் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம், சுழிபுரம் - பிளவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பண்ணாகம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் தரம் 9 இல் கல்வி கற்கும் 14 வயதான மாணவனே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகக் கைத்தொலைபேசியில் விளையாட்டில் ஈடுபட்டு வந்தமையால் மாணவனின் தாயார் கைத்தொலைபேசியைப் பறித்து வைத்துள்ளார்.

அதனைப் பொறுக்க முடியாத மாணவன் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-3,104)

## யாழில் 21 பேரு...

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை - 04, யாழ். போதனா வைத்தியசாலை - 03, யாழ். சிறைச்சாலை - 08, யாழ். நகர சபை சுகாதார அதிகாரி பிரிவு - 02, சண்டிலிப்பாய் சுகாதார அதிகாரி பிரிவு - 02, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு - 01, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு - 01, முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையம் - 01 இவ்வாறு 22 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று 293 பேருக்கு பரிசோதனை மேற்கொண்டதில் எவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படவில்லை என வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-3,18,33)

## கொரோனா...

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 588 ஆக அதிகரித்துள்ளது.(ம-3)

## துப்பாக்கியும்...

காணி உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்யும்போது, நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வெடி பொருட்கள் இனம் காணப்பட்டன.

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார், உரப்பை ஒன்றில் பொதி செய்யப்பட்ட நிலையில், ரி56 ரக துப்பாக்கி ஒன்றையும் 420 ரவைகளையும் கைப்பற்றியுள்ளனர். (ம-3)

## கொழும்பு...

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் பேசிய சிறீதரன், அவரது மௌனம் தமிழர்களை வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மீது மதம் கடந்து, மதத்தலைவர் என்ற அடையாளத்தை கடந்து மல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் உதிர்க்கப்படும் வார்த்தைகள் இன்று பல மக்களுடைய புருவங்களை உயர்த்த வைத்துள்ளது.

கொழும்பு பேராயர், சிங்கள கிறிஸ்தவர்களுக்காக பேசுகின்றாரா? அல்லது உலகத்தில் வாழ்கின்ற கிறிஸ்தவர்களுக்காக பேசுகின்றாரா? என்ற கேள்வி காணப்படுவதாகவும் சிறீதரன் குறிப்பிட்டார். (ம-3)

## பிரித்தானிய...

தூதுவர் சாரா ஹமில்டனை உத்தியோக பூர்வமாக சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்றைய தினம் கொழும்பில் இடம்பெற்றுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ கட்சியின் ஊடக பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள், அரசியல் தீர்வு, மாகாண சபை தேர்தல்கள், நில அபகரிப்பு, அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டதாகவும், குறித்த சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்றிருந்ததாகவும் கு.சுரேந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் மற்றும் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

## மலசலகூடத்...

கட்டுடையைச் சேர்ந்த பகிரதன் கிருஷாந்தி (வயது-23) என்ற கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் சுகயீனம் காரணமாக தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதன்போது நேற்று முன்தினம் காலை மலசலகூடத்திற்கு சென்றிருந்த நிலையில் அங்கு சறுக்கி விழுந்து மயக்கமடைந்திருந்தார்.

இந்நிலையில் குறித்த பெண்ணை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## பெட்டி...

பெற்று வந்த குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த 29 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயான பி.செல்வராணி என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண் கடந்த 31 ஆம் திகதி தனது வீட்டின் அறையில் உயரத்தில் இருந்த பெட்டி ஒன்றினை தூக்கும்போது அது தவறுதலாக அவரது இடுப்புப் பகுதியில் விழுந்ததில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## காதலனின்...

யுவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த யுவதியின் காதலன் கடந்த 3 ஆம் திகதி சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். இதனைத் தாங்க முடியாத காதலியும் அவரது வீட்டில் நேற்று முன்தினம் தூக்குப் போட்டு தற்கொலை செய்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## சர்வதேச...

அவர் செய்த படுகொலைகள் ஒருபோதும் மறைந்து விடாது.

துணிச்சல் இருந்தால் சர்வதேச நீதிமன்றத்திற்கு வாருங்கள். நாம் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கத் தயாராக உள்ளோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கூறியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் பேசிய அவர், இலங்கை அரசாங்கத்தினால் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையானது அரசியல் நோக்கத்தை மாத்திரம் அடிப்படையாக கொண்டது.

அரசாங்கத்தினால் தடை விதிக்கப்பட்ட அமைப்புக்களோ அல்லது தனி நபர்களோ எந்தவொரு பயங்கரவாத செயற்பாடுகளுடனும் தொடர்புபட்டவர்கள் அல்ல எனவும் மேலும் கூறினார். (ம-3)

மெகா பவர்
திகதி 06/04/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0809
M 06 10 58 64 72

மஹஜன சம்பத
திகதி 2021/04/06
சீட்டிழுப்பு இலக்கம் 4449
F 9 4 1 5 1 4

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 06.04.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2744
U 02 41 69 73

தன நிதானய
திகதி - 2021.04.06
சீட்டிழுப்பு இலக்கம் - 486
J 13 23 46 72

சுபிரி வாசனா
2021/04/06 1589
10 02 08 30 34

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1245
சீட்டிழுப்பு திகதி 06.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 125,865,560
வெற்றி இலக்கங்கள் 11 44 68 71 K

சனிதா
சீட்டிழுப்பு இல: 3575
சீட்டிழுப்பு திகதி 06.04.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,341,061
வெற்றி இலக்கங்கள் 22 28 35 47 U

சுப்பர் ஜக்பொட் 26,91,135/=
திகதி : 06.04.2021
வெற்றி வாரம் : 3126
வர்ணம் : சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 18 29 36 57 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,220,980

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1419
சீட்டிழுப்பு திகதி 06/04/2021
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் K 25 27 55 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் 50,794,900/=

சீட்டிழுப்பு 712
06.04.2021 செவ்வாய்
D 11 16 26 33
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,486,305
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ(f)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(f)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புக்களை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6449)

077 224 2787

உடனடி வேலை வாய்ப்பு

V2 TRAVELS விரைவு பொதிகள் சேவை (C-1895)

வாடிக்கையாளர் சேவை அலுவலர்

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)

சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்

சம்பளம் - 25'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777068777 v2vacancies@gmail.com

யாழ் கிளை தற்காலிக இடமாற்றம்

V2 TRAVELS விரைவு பொதிகள் சேவை

COVID-19 யாழ் நகர முடக்கம் காரணமாக

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். இல் இயங்கிவந்த எமது யாழ் கிளை மறு அறிவித்தல் வரை

College Of International Migration Skills 49A, சப்பல் வீதி யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் அருகில்) இல் இயங்குகிறது

(C-1895) 0768226241

அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-1842)

070 3305500 077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

பௌதிகவியல்

பாடத் திட்டம் + கடந்தகால வினாக்கள்

2021/2022/2023/ REPEAT

தனிப்பட்ட / குழு வகுப்புக்கள் (6487)

ஆ. நித்தியானந்தன் (B.Sc,Dip.in.Ed.)

Home Visit Available

076 799 9005

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
- நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
- பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-1841)

0768226240 DHL

10வருட வெற்றிகரமான சேவையில்....

கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது விசா ஆலோசனை வாயிலாக கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

புதிய பிரிவுகள் ● திருமணமாகி லண்டன் செல்பவர்களுக்கான LIFESKILLS A1 வகுப்புக்கள் மற்றும் GERMAN A1 வகுப்புக்கள் IELTS வகுப்புக்கள்10/04/2021அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம். (C-1896)

இதுவரையில் 178 மாணவர்கள் எமது ஆலோசனை வாயிலாக பயன்பெற்றுள்ளனர் | விசா கிடைக்கும்வரை முற்பணம் பெற்றுக்கொள்ளப்படமாட்டாது

யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில் கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம் | நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...

WORLD EDUCATION CONSULTANCY

அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்

கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.

0779265447 / 0217200989


# ஈஸ்டர் தாக்குதலுக்குள்ளானவர்களுக்கு நியாயத்தை அரசு நிச்சயம் வழங்க வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் தீர்மானிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்குரியதாகும். எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்டோருக்கான நியாயத்தை தற்போதைய அரசாங்கம் நிச்சயம் வழங்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு விசாரணைகளை முன்னெடுத்தது. ஆனால் ஜனாதிபதி ஆணைக் குழுவினால் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகளை மாத்திரமே முன்வைக்க முடியும் என்றார்.

(ம-03)


வேலை ஆள் தேவை

திருநெல்வேலியில் இயங்கிவரும் சிறிய உணவகம் ஒன்றுக்கு ரொட்டி வேலை தெரிந்தவர் ஒருவர் தேவை.

[ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ] (6489)

☎-076 878 3734

சேஞ் ஓவரால் மரம் அரிபவர் தேவை

பளைப் பிரதேசத்தில் தறித்த மரங்களை சேஞ் ஓவர் இயந்திரத்தினால் றீப்பைகளாக அறுத்து தரக்கூடியவர் தேவை.

( ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் ) (ஜ)

☎-076 097 3124

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய் கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.


தரகர் தேவையில்லை.

(கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்) (6488)

☎-077 288 0152

077 623 4204, 077 235 2656


# மரண அறிவித்தல்



## கந்தர் இளையதம்பி

வரணி, இயற்றாலை, வரணியைப் பிறப்பிடமாகவும் கண்டாவளையில் வசித்தவரும் தற்போது வரணி, இயற்றாலை, வரணியைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் இளையதம்பி நேற்று (06.04.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் - பாறிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் சடையம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்கந்தராசா (காந்தி - லண்டன்), குகானந்தன் (குகன் - லண்டன்), தர்மலோசினி (சுதா - லண்டன்), சச்சிதானந்தன் (சுகந்தன் - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசம்மா (லண்டன்), சிவாநந்தினி (லண்டன்), திருஞானம் (லண்டன்), துருசா (கனடா) ஆகியோரின் மாமனாரும் அஸ்வின், அஸ்வினா, நிதுஷன், யெனுஸ், ஜதுஸ் (லண்டன்), அபிஷன், அக்ஷன், லக்சிகன், அனாமிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.04.2021) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காந்தன் (மகன்) - 0044757238071O
குகன் (மகன்) - 00447448731654
சுகந்தன் (மகன்) - 0016134305678
சுதா (மகள்) - 00447985709199
மனைவி - 077 385 1915

(C-1900)

வரணி,
இயற்றாலை.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.